For private circulation only

Book Post


https://christianhistoricalsociety.in/

# கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

ஜூலை 2024 திசை தெரியாமல் திகைக்காதிருக்க திருச்சபை வரலாறு தெரியவேண்டும் விலை : ரூ 60 இதழ் 50

www.christianhistoricalsociety.in





Engage, Enrich & Empower Christian knowledge

www.christianhistoricalsociety.in


NEW RELEASE!

# அந்நிய தேசத்தில் இந்திய திருச்சபை

ஆசிரியர்

**முனைவர் நெப்போலியன் பத்மநாதன்**

அந்நிய தேசத்தில் இந்திய திருச்சபை என்ற முனைவர் நெப்போலியன் பத்மநாதன் ஐயா அவர்களின் நூல். இதை திருநெல்வேலி திருமண்டலத்தின் 244 வது மாம்பழச் சங்கம் மற்றும் வருடாந்திர தோத்திர பண்டிகை ஆராதனையில் தென்னிந்தியத் திருச்சபை திருநெல்வேலி திருமண்டல பேராயர் Rt Rev Dr ARGST. பர்னபாஸ் அவர்கள் வெளியிட இலங்கை குருநாகல பேராயர் நிஷந்த பெர்னாண்டோ அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். இந்நூல் இந்திய உள்நாட்டு அருட்பணியாளர்கள் எப்படி இலங்கையில் சென்று அருட்பணியாற்றினார்கள் என்ற வரலாறு ஒதுக்கப்பட்ட மக்கள் வரலாற்று வரைவியல் கண்ணோட்டத்தில் எழுதப்பட்டுள்ளது. உலகின் மிகச் சிறந்த வெற்றிகரமாக அருட்பணித் தளத்தின் அருட்பணி வரலாறு தமிழ் வாசகர்களுக்காக.




Contact Us

**லா.சிறிதரன் கலிஸ்டஸ்**

**+91 96775 77342**

## விலை. 400 மட்டும்.

# பதிப்பாசிரியரிடமிருந்து..

கிறிஸ்துவுக்குள் அன்பான வரலாற்றுச் சுவடுகள் வாசகர்களே,
ஆண்டவரும், மீட்பருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தினாலே உங்கள் அனைவருக்கும் கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தின் சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.
'பூர்வநாட்களை நினை; தலைமுறை தலைமுறையாய்ச் சென்ற வருஷங்களைக் கவனித்துப்பார்; உன் தகப்பனைக் கேள், அவன் உனக்கு அறிவிப்பான்; உன் மூப்பர்களைக் கேள், அவர்கள் உனக்குச் சொல்லுவார்கள்'. உபாகமம் 32; 7
19 ம் நூற்றாண்டு ஆரம்பங்களில் மிஷனெரிகள் செய்த பணிகளை தொடர்ந்து எழுதி வருகின்றோம். மிஷனெரிகளுக்கு தோள் கொடுத்த இந்திய ஊழியர்களின் வரலாறுகளை குறித்தும் சபைகளை குறித்தும் இன்னும் அநேகம் எழுதத்தப்பட வேண்டும். இவ்விதழளை வாசிக்கும் நேயர்கள், மிஷனெரிகள் மற்றும் ஊழியர்களின் தியாகங்களை மற்றவர்களோடு கூட பகிர்ந்துக் கொண்டு, மிஷனெரிகள் ஏற்றிய அந்த தியாக தீபத்தை அடுத்த தலைமுறையினரின் கரங்களில் கொடுப்பது நம் கட்டாய பணியாகும். எனவே வாசகர்கள் மற்றவர்களுக்கு இதழை அறிமுகப்படுத்த அன்போடு கூட கேட்டுக் கொள்ளுகின்றேன். ஒவ்வொரு மாதமும் இவ்விதழை வெளியிடுவதற்கு மிகுந்த பொருட்செலவுகள் உண்டு, புதுப்பிக்காதவர்கள் மாத சந்தாவை புதுப்பித்துக் கொள்ளும்படி அன்புடன் நினைவுபடுத்துகிறேன். முடியுமானால் காணிக்கையாகவோ அல்லது நன்கொடையாகவோ கொடுத்து தாங்க அன்போடு கூட கேட்டுக் கொள்ளுகின்றேன்.
கிறிஸ்தவ வரலாற்றுச் சங்க நூலக மற்றும் அருங்காட்சியகம் கட்டுமானப் பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன. தொடர்ந்து தாங்கவும் ஜெபிக்கவும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பாரபரனின் பணியில்

manna selvakumar

**சுஜித் ரெக்ஸ்**
வடிவமைப்பு

**மன்னா செல்வகுமார்**
ஆசிரியர்

இது ஒரு வரலாற்றுச் சங்க உறுப்பினர்களுக்கான பதிப்பு.
சந்தா விபரங்கள் இதழின் உள்ளே,


கிறிஸ்தவ
# வரலாற்றுச் சுவடுகள்


### மாத ஆய்விதழ் சந்தா விபரம்

| சந்தா விபரம் | உள்நாடு |
|---|---|
| தனிப்பிரதி | ₹ 60 + நன்கொடை |
| ஆண்டு சந்தா | ₹ 600 + நன்கொடை |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 3000 + நன்கொடை |

### வங்கி விபரம்

Name: Christian Historical Society
A/c Number : 1748 020000 4906
Bank name : Federal Bank
IFSC code: FDRL0001748

"கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்"
மாத ஆய்விதழை நீங்கள் தொடர்ந்து பெற்றுக் கொள்ள
G-Pay மூலம் நன்கொடை செலுத்த 91767 80001 என்ற எண்ணுக்கு செலுத்தவும்
காசோலை மற்றும் வரைவோலை செலுத்த
'கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்'
( Christian Historical Society )
என்ற பெயரில் எடுக்கவும்


### ஆசிரியர்

**கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,**
**கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,**
**பங்களாச் சுரண்டை-627859,**
**தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)**
**04633 290401, 91767 80001**


christianhistoricalsociety.in
tchsportal.co.in

# பிஷப் ஹீபர் உயிர்நீத்த நினைவுச் சின்னத்தின் இன்றைய நிலை – திருச்சபையின் பாராமுகம்



ஜே.பர்னபாஸ்
சேலம் வரலாற்றுச் சங்கம்

***கல்கத்தாவின் இரண்டாவது பேராயர்:***

பிஷப் ரெஜினால்ட் ஹீபர் (Bishop Reginald Heber, D. D.) அப்பொழுது இந்திய துணைக் கண்டம் முழுமைக்கும் (The erstwhile Indian Subcontinent which includes India, Pakistan, Bangladesh, Burma), இலங்கை உட்பட இந்துமா சமுத்திர தீவுக்கூட்டங்கள், ஆஸ்திரேலியா, நியூசிலாந்து வரை அவரது ஆன்மீக ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. இவ்வளவு பெரிதான இந்த பேராயத்தை அன்றைய இந்தியாவின் தலைநகரான கல்கத்தாவிலிருந்து (Calcutta – Kolkata) அவர் வழிநடத்தியதால் கல்கத்தாவின் பேராயர் என அழைக்கப்பட்டார். தனது பேராயத்தின் மக்களைச் சந்திக்க அவர் புறப்பட்ட அந்த நெடும்பயணம் சவாலானது. சென்னை, தஞ்சாவூர், திருவாங்கூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய அன்றைய மகாபட்டணங்கள் முக்கியத்துவம் பெற்றன. 1826ஆம் ஆண்டு கொடிய வெய்யில் நிலவும் ஏப்ரல் மாதத்தில் அவரது திருச்சிராப்பள்ளி விஜயம் அமைந்தது விதிவசமே. தனக்கு முன்பாக பதவி வகித்த இந்தியாவின் முதல் பேராயர் மிடில்டன் (First Bishop of Calcutta Rt. Rev. Middleton) அவர்களால் 1816ஆம் ஆண்டு திருநிலைப் படுத்தப்பட்ட திருச்சிராப்பள்ளி செயின்ட் ஜான்ஸ் தேவாலயத்தில் கொடிய வெய்யில் நிலவும் கோடை காலத்தில் நடந்த நீண்ட ஆராதனைகளில் பங்கேற்ற அவர் சோர்வடைந்தார். வெய்யிலில் வியர்த்துப்போன அவர் பக்கத்தில் இருந்த வீட்டிற்குச் சென்று ஆடைகளை களைந்துவிட்டு சிறிது ஓய்வு எடுத்தார். பின்னர் மீண்டும் வந்து ஆலய வளாகத்தில் கூடிய பெருங்கூட்டத்தில் பேசி, மக்களை ஆசீர்வதித்தார். இதனால் ஏற்பட்ட அதிகப்படியான களைப்பில் தான் தங்கியிருந்த நீதிபதி ஜான் பேர்ட் (Justice John Bird) இல்லத்திற்கு விரைந்த பேராயர் அருகில் இருந்த குளியல் குளத்தில் (Plunge Bath) சோர்ந்து களைப்படைந்த நிலையிலேயே இறங்கிய அவரது இதயம் உடனடியாக நின்றுபோனது. (He plunged into the bath in his exhausted condition, and his heart stopped)

பேராயர் குளத்தில் முழுகி இறந்த நிலையில் அவரது உடலை மீட்ட நண்பர்கள், குருமார் ஆகியோர் அவரது உடலை தூக்கிக் கொண்டு மருத்துவரிடம் ஓடினார்கள். மருத்துவர்களின் உதவிகள் பயனற்றுப்போன நிலையில் பேராயரின் அகால மரணம் உறுதியானது.

***ஆயத்தமாயிருங்கள்:***

அடுத்த நாள் பேராயரின் உடல் செயின்ட் ஜான்ஸ் தேவாலய பலிபீடத்தின் வலதுபக்கம் சகல மரியாதைகளுடன் நல்லடக்கம் செய்யப்பட்டது. (His body was buried on the north side of the altar in St. John's Church)

இவரது நினைவாக பலிபீடத்தில் பதிக்கப்பட்ட பளிங்கு கல்வெட்டு வாசகம் சொல்லும் செய்தி (இது சேலம் ஜமீன்தாரினி திருமதி. ஜெசி அம்மையாரின் கணவர் சங்கை தாமஸ் போக்ஸ் ஐயர் (Rev. Thomas Foulkes) திருச்சிராப்பள்ளியின் Chaplain ஆக பொறுப்பேற்ற காலத்தில் அவரால் அமைக்கப்பட்டது.)

Sacred to the memory of
Reginald Heber, D. D. ,
Lord Bishop of Calcutta ,
Who was here, suddenly called to his eternal rest
During his visitation of the Southern Provinces of his extensive
Diocese on the 3rd day of April A. D. MDCCCXXVI and in the 3rd
year of his Episcopate.
Be ye also Ready '

இந்த நினைவுச் சின்னத்திற்கு மேலே கிழக்கின் சூரிய ஒளியில் ஜொலிக்கும் பேராயர் ஹீபர் நினைவான கண்ணாடி ஓவியம் (East window of Stained glass) இது 'The Church in Madras' என்ற சென்னை இராஜதானியிலே அன்றைய ஆங்கிலேய திருச்சபைகளின் வரலாற்றைச் சொல்லும் புத்தகத்தை எழுதிய சங்கை பிராங் பென்னி ஐயர் (Rev. Frank Penny) அமைத்திட்ட கூடுதலான நினைவுச் சின்னம்.

***பிஷப் ஹீபர் உயிர்நீத்த குளமும் நினைவுச் சின்னமும் :***

பிஷப் ஹீபர் உயிர்நீத்த குளம் 2011ல் அது அகற்றப்படுவதற்கு முன்பாக எடுக்கப்பட்ட படத்தில் அது அதற்கும் வெகு முன்பாகவே சேதமடைந்துள்ளதைக் காட்டுகிறது. பல ஆண்டுகளாகவே நம்மவர் யாரும் இதன்மீது அக்கறை கொள்ளவில்லை என்பதையே இது காட்டுகிறது. சில What's app Group ல் இந்த ஒளிப்படங்களைப் பகிர்ந்தது, ஒரு தெளிவான காட்சியை நாம் பெறுவதற்கும், இதற்கான பணிகளை நாம் மேற்கொள்ளவும் வழிவகுத்ததற்காய், அருள்திரு. இர்வின் ஞானமுத்து அவர்களுக்கு நன்றி சொல்கிறேன்.

அன்று அதாவது 1882ல் பிஷப் ஹீபர் மறைந்து 56ஆண்டுகளுக்கு பின்னர், இந்த குளம் கண்டறியப்பட்டு அது பழுதுபார்க்கப்பட்டு, அதன் அருகே ஒரு நினைவுச் சின்னமும் ஆங்கில அரசாங்கத்தின் செலவில் வைக்கப்பட்டது. அதில் எழுதப்பட்ட வாசகங்கள்:

'In memory of the devoted, accomplished, beloved, and universally honoured servant of God, Reginald Heber, D. D., second Bishop of Calcutta and one of India's truest and most loving benefactors. This stone was erected in the year 1882 at the expense of Government on the margin of the bath in which he was drowned while bathing on the 3rd April 1826. His body was laid under the chancel in the Church of St. John, Trichinopoly, in the hope of the Resurrection of the just to eternal life through Jesus Christ. '



தற்பொழுது இந்த நினைவுச் சின்னம் மூன்று துண்டுகளாக உடைந்த நிலையில் திருச்சிராப்பள்ளி நீதிமன்ற வளாகத்தில் கிடக்கிறது. இது இந்த இடத்தில் ஏன்? எப்பொழுது? போடப்பட்டது ! என்ற கேள்விகள் எழுகின்றன. ஒரு தண்ணீர் தொட்டி அருகே Post office எதிரில் யாரும் கண்டுகொள்ளாத நிலையில் பல ஆண்டுகள் மண்அப்பி கிடந்திருக்கிறது. சமீபத்தில் ஒருவர் இந்த உடைந்துபோன வரலாற்றுச் சின்னத்தை சமூக வளைதளத்தில் பதிவிட்டபோதுதான் எல்லாம் தொடத்தொட தொடர்ந்தது, வரலாறுகள் புரிந்தது. திருச்சபையின் பாராமுகமும் தெளிவாக தெரிகிறது. பலப்பல ஆண்டுகளாக கைவிட்ட ஒரு விஷயத்தை இப்பொழுது திருச்சபை கையிலெடுக்க தயங்குகிறதா? இதற்கான தீர்வு என்ன?

***நினைவுச் சின்னத்தை பாதுகாத்து தகுந்த இடத்தில் நிலைநிறுத்த முயல்வோம்:***

உடைந்துபோய் கிடக்கும் அந்த நினைவுச் சின்னத்தை சரிசெய்து, நீதித் துறையினருடன் பேசி நீதிமன்ற வளாகத்தில் தகுந்த ஒரு இடத்தில் இந்த நினைவுச் சின்னத்தை நிறுவுவதே சிறப்பானதாக அமையும். ஏற்கெனவே ஒரு நீதிபதியின் நினைவுச் சின்னம் திருச்சிராப்பள்ளி நீதிமன்ற வளாகத்தில் இருப்பதை நாம் அறிவோம். அதைப் போல இதுவும் அமைக்கப்பட்டால் திருச்சிராப்பள்ளியின் கல்வி வளர்ச்சிக்கு வித்திட்ட பிஷப் ஹீபர் என்றென்றும் நினைக்கப்படுவார் என்பதில் ஐயமில்லை.

திருச்சிராப்பள்ளி நீதிமன்ற வளாகத்தில் உள்ள ஆங்கிலேய நீதிபதி H. O. D. ஹார்டிங் நினைவுச் சின்னத்திற்கு அஞ்சலி செலுத்தும் நீதித் துறையினர்.





இதுபோலவே பிஷப் ஹீபருக்கும் அவரது அந்த 142ஆண்டுகள் பழமையான நினைவுச் சின்னம் சரிசெய்யப்பட்டு நிலைநிறுத்தப்படுவது ஏற்புடையதாகும். இல்லாவிட்டால் ஒரு புதிய நினைவுச் சின்னமே பேராயரின் நினைவிற்கு உருவாக்கப்பட்டு நீதிமன்ற வளாகத்தில் நிறுத்தப்படுவதும் சிறப்பானதே.

இது குறித்து தமிழ்நாட்டின் முதல்வருக்கு கடந்த 29-6-2024 அன்று சேலம் வரலாற்றுச் சங்கம் சார்பில் ஒரு வேண்டுகோள் விண்ணப்பம் Onlineனிலும், தபால் மூலமாகவும் அனுப்பி உள்ளோம். கூடுதலாக இந்த விஷயத்தின் முக்கியத்துவம் கருதி தமிழ்நாட்டு அரசின் சிறுபான்மையினரின் ஆணையத் தலைவர் பீட்டர் அல்போன்ஸ் அவர்களுக்கும், திருச்சிராப்பள்ளி கிழக்கு தொகுதி MLA அவர்களுக்கும், இது குறித்த நடவடிக்கைகளுக்கு பரிந்துரைக்கும்படி கடிதங்கள் இன்று சேலம் வரலாற்றுச் சங்கம் சார்பில் அனுப்பப்பட்டது. இது விஷயத்தில் ஒரு சிறப்பான நடவடிக்கை பிஷப் ஹீபரின் நித்திய நினைவிற்கு எடுக்கப்பட வேண்டி ஜெபிப்போம், செயலாற்றுவோம்.



பேராயரின் உடலை தூக்கிக் கொண்டு ஓடுகின்ற காட்சியை சித்தரிக்கும் ஒரு ஓவியம்



# மிஷனெரி. ஜான் ஜே லாரன்ஸ்

## (CSI மதுரை - இராமநாதபுரம் திருமண்டிலம்)

**Rev.G. P. இராஜா**

CSI. பழனி நகர் குருசேகரம்

### அருள்திரு. ஜான் ஜே லாரன்ஸ் வருவதற்கு முன்:

இலங்கையிலுள்ள யாழ்ப்பாணத்தில் அமெரிக்கன் மிஷன் ஸ்தாபனம் 1816ஆம் ஆண்டு தமிழர்கள் வசிக்கும் பகுதியில் தன்னுடைய மிஷனெரிப் பணியை ஆரம்பித்தது. ஊழிய வளர்ச்சியை முன்னிட்டும், ஊழிய வெற்றியை முன்னிட்டும், அருகிலுள்ள நாடுகளில் விஷேசமாய் தமிழர்கள் மத்தியில் ஊழியத்தை ஆரம்பிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடும். புதிய ஊழியக்களத்தை இந்தியாவிற்கு தெற்குப் பகுதியில் கண்டுபிடிக்க வேண்டும் என அருள்திரு. லேவி ஸ்பாலிடிங் இந்தியாவிற்கு அனுப்பப்பட்டார். ஸ்பாலிடிங் 1834 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10ம் தேதி இராமநாதபுரத்தின் அருகிலுள்ள தேவி பட்டணத்தில் வந்து இறங்கினார். பின்பு இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில் ஆகிய இடங்களைச் சுற்றிப் பார்த்துவிட்டு மதுரையே மிஷனெரி பணித்தளத்திற்கு சிறந்த இடம் என தேர்வு செய்தார்கள். ஏனென்றால், திருநெல்வேலியில் திருச்சபை மிஷனெரி சங்கமும்(CMS) நாகர்கோவிலில் லண்டன் மிஷனெரி சங்கமும்(LMS) பணியாற்றிக் கொண்டிருந்தது. மேலும், மதுரை, பாண்டிய மன்னர்களின் தலைநகராகவும், பிராமணர்களின் செல்வாக்குடனும், நற்செய்தி அறிவிக்கப்படாத இடமாகவும் இருந்தது. எனவே 1834 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 30ஆம் தேதி அருள்திரு. ஸ்பால்டிங், டாட், காஸ்டிங்டன் மற்றும் பட்டிக்கோட்டா இறையியல் கல்லூயில் படித்த மூன்று வாலிபர்களும் மதுரை வந்து சேர்ந்தனர்.

1934 ஆம் வருடத்திற்கு முன் தரங்கம்பாடியிருந்து மிஷனெரிமார் மதுரை, மதுரையைச் சுற்றியுள்ள பகுதிகளில் உபதேசிமார்களை அனுப்பினபடியால் திண்டுக்கல், மதுரை, இராமநாதபுரம் ஆகிய இடங்களில் கிறிஸ்தவர்கள் இங்குமங்கும் சிதறியிருந்தார்கள். 1830 ஆம் வருடம் பாளையங்கோட்டையிலிருந்து ரேனியஸ் தன்னுடைய உபதேசிமார்களை கம்பம் பள்ளத்தாக்கு பகுதிகளுக்கு அனுப்பி கம்பம், புதுப்பட்டி, கோகிலாபுரம், ஆணமலையானபட்டி ஆகிய இடங்களில் CMS சபைகளை உருவாக்கினார்கள்.

1834 ஆம் ஆண்டு அமெரிக்கன் மதுரை மிஷன் ஆரம்பிக்கப்பட்டாலும் 1836 ஆம் ஆண்டு வரை ஒருவரும் புதிதாக கிறிஸ்தவராக மாறவில்லை. 1834 ஆம் வருடம் முதல் 1844 ஆம் வருடம் வரை சுமார் 10 வருடங்ளுக்குள் 96 பேர் மட்டுமே திருச்சபையின் அங்கத்தினர்களாயிருந்தார்கள்.

### அருள்திரு. ஜான் ஜே லாரன்ஸ் மிஷனெரி:

அமெரிக்க நாட்டில் நியூயார்க் மாநகரிலுள்ள ஜெனஸ்சேயோ (Geneseo) என்ற இடத்தில் 1807ஆம் ஆண்டு ஜீலை மாதம் 12ம் தேதி பிறந்தார். தன்னுடைய பட்டப்படிப்பை ஐக்கிய கல்லூரிலும் (1829), ஆண்டோவர் இறையியல் கல்லூரியிலும் (1834) படித்து முடித்தார்.

### மிஷனெரி பணி தொடங்குதல்:

1835 ஆம் ஆண்டு மே மாதம் 16ம் தேதி யாழ்ப்பாணத்தில் மிஷனெரியாக பணியாற்றிக்கொண்டிருந்த அமெரிக்கன் மிஷன் ஸ்தாபத்தோடு இணைந்தார். இவர் தானியேல் பூவரோடு எக்கார்டு வேண்டுகோளுக்கிணங்கி யாழ்ப்பாணத்திலிருந்து மதுரை மிஷனுக்கு மாற்றப்பட்டார்.

### மதுரையில் மிஷனெரி பணி:

1835 அக்டோபர் மாதம் 18 ஆம் தேதி மதுரை வந்து 1836 அக்டோபர் வரை மதுரையில் ஊழியம் செய்தார். பின்பு 1836 ஜுலை மாதம் 5 ஆம் தெதி திண்டுக்கல்லுக்கு லாரன்ஸ் மற்றும் டுவைட் மாற்றப்பட்டு ஊழிய பணியை செய்தார். பின்பு 1846 நவம்பர் 24 ஆம் தேதி வரை பணியாற்றினார். இவர் திண்டுக்கலில் தங்கியிருந்து மதுரை மாவட்டத்தின் வடக்கு, மேற்கு பாகங்களில் உள்ள பல ஊர்களில் முதன் முதலாய் நற்செய்தியை அறிவித்தார். இவர் திண்டுக்கல்லில் இருந்து மலைப் பகுதியான பூம் பாறை வரை, குறிப்பாக வடக்கே பழனி வரையிலும் மலைப்பகுதி கிராமங்களில் ஊக்கத்தோடு நற்செய்தி பணி செய்தார். பழனி நகரத்தில் முதன்முதலாய் நற்செய்தி அறிவித்தவரும், திருச்சபையை உருவாக்கினவரும் இவரே.

### திண்டுக்கலில் மிஷனெரி பணி :

1837 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அருள்திரு. ஜான் ஜே லாரன்ஸ் குடும்பமும், அருள்திரு. டுவைட் குடும்பமும் இணைந்து திண்டுக்கல்லில் நற்செய்தி பணியை தொடர்ந்தார்கள். லாரன்ஸ் அவர்கள் ஓலையால் வேயப்பட்ட ஆலயத்தில் இறைப்பணியை செய்தார். அதே ஆண்டில் இந்து மதத்திலிருந்து காமாட்சி என்பவர் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு திருமுழுக்கு பெற்றார். இவரைத் தொடர்ந்து 9 நபர்கள் திருமுழுக்கு பெற்று திருச்சபையில் சேர்ந்தார்கள். திண்டுக்கல்லில் வீடு கட்ட நிலமும், ஆங்கில பள்ளிக்கு ஒரு பங்களாவும், இலவச பள்ளிக்கு ஒரு பங்களாவும் வாங்க மிஷன் அவர்களுக்கு அனுமதி கொடுத்தது. திண்டுக்கல் கவாடக்காரன் தெரு தொடங்கி செனரல் ரோடு வழியாக கிழக்கே ரவுண்டுரோடு ரேஸ்கோர்ஸ் மைதானம் வரை, தெற்கே அரண்மனைக்குளம் வடகரை தொடங்கி வடக்கே, வடக்கு காவல் நிலையம் எதிரே உள்ள ரோடு வரை இடம்

வாங்கப்பட்டது. இதன் பரப்பளவு சுமார் 17 ஏக்கர் நிலமாகும். திண்டுக்கல்லில் ஒரு இந்திய சிறுவன் தலையில் தன் கையை வைத்துத் தொட்டு, அவனை தன் படிப்பறைக்கு அழைத்துச் சென்று அவனுக்காகச் ஜெபித்தார். இந்தச் சிறு அன்புச் செயல் அந்தப் பையன் உடனே கிறிஸ்தவனாகும்படி தன்னை அர்ப்பணித்தான். அந்த பையன் யாரென்றால் திண்டுக்கல்லுக்கு அருகேயுள்ள மேட்டுப்பட்டியைச் சேர்ந்த சூசை என்ற ஆல்பர்ட் பார்ன்ஸ் என்பவரே. மற்றொரு மிஷன் பணியாளரான L. டேவிட் என்பவரும் லாரன்ஸ் அருளுரையைக் கெட்டு ரோமன் கத்தோலிக்க சபையை விட்டு மிஷனில் சேர்ந்தார்கள். 1838 ஆம் ஆண்டு அருள்திரு. பூர் என்ற மிஷனெரி திண்டுக்கல்லில் பணிபுரியும் போது காற்று மழையினால் ஆலயம் பாதிக்கப்பட்டது. அதன்பின்பு பெரிய ஆலயமாக மேம்படுத்தப்பட்டது. தற்போது இந்த ஆலயம் மிகப்பெரிய அளவில் வளர்ச்சி பெற்று சாட்சியாக உயர்வான கோபுரத்துடன் சிறந்து காணப்படுகிறது.

## சிறுமலையில் தோல்வியடைந்த பணி :

1838 ஆம் ஆண்டு சிறுமலையை தேர்வு செய்து, அங்கு மிஷனெரி பணியும், கோடை காலத்தில் தங்குவதற்கு பங்களா கட்டுவதற்கு இடத்தை பார்க்க அருள்திரு. லாரன்ஸ் மற்றும் அருள்திரு. டாடையும் ஆராந்து பார்த்து பொருத்தமான இடத்தை கண்டு ரூபாய் 100/- முதல் 150/- ரூபாய்க்குள் கட்டலாம் என்று மிஷனுக்கு அறிவித்து கட்ட தீர்மானித்தார்கள். இந்த பங்களாவில் கோடைக்காலத்தின் மிஷனெரிகள் ஓய்வுக்கு கட்ட தீர்மானமானது. மீண்டும் லாரன்ஸ் மற்றும் கிரேனும் 1843 ஆம் ஆண்டு சிறுமலையில் ரூபாய் 550க்கு கோடைக்கால வீடு கட்ட அனுமதித்தது மிஷனெரி ஸ்தாபனம். இங்கு அருள்திரு. முசி 1844ஆம் ஆண்டு பார்வையிட்ட போது காலராவினால் பாதிக்கப்பட்டு ஓரளவு குணமடைத்தார். ஆனால், அருள்திரு. ஜான் ஜே லாரன்ஸ் மகள் இங்கு நோயினால் மரித்ததினால் இந்த சிறுமலை கோடைக்காலத்தில் தங்குவதற்கு பொருத்தமான இடம் இல்லையென்று இந்த இடம் கைவிடப்பட்டது.

## அருள்திரு. லாரன்ஸ் பழனியில் மிஷனெரி பணி:

1838 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் அருள்திரு. வார்டும் மற்றும் அருள்திரு. லாரன்சும் பழனி பகுதியில் சுற்றி திரிந்து நற்செய்தி பரப்பினார்கள். திண்டுக்கல்லிருந்து சுமார் 35மைல் தூரம் நடந்து வந்து மிஷனெரிப் பணியை செய்தார்கள். அநேக மக்கள் அவரைச்சுற்றி நின்றார்கள், அதே இடத்தில் அருள்திரு. லாரன்ஸ் முழங்காளில் நின்று ஜெபித்தார். இந்த ஜெபம் 11 ஆண்டுக்கு பிறகு நிறைவேறியது. அருள்திரு. லாரன்ஸ் உருவாக்கிய திருச்சபைகளை 1846 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அருள்திரு. ரெண்டல் அவர்கள் பார்வையிட்டார். 1859 ஆம் ஆகஸ்ட் 9 ஆம் தேதி S. P. G மேற்பார்வையில் பழனி பகுதியில் செய்யப்பட்ட ஊழிய பணிகளை மதுரை மிஷனுக்கு மாற்றப்பட்டது. 336 ராத்தல் எடையுள்ள ஐந்து ஆலய மணிகள் பாஸ்டன் நகரிலிருந்து கடல் வழியாக தமிழ்நாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. திண்டுக்கல், பசுமலை, சிவகங்கை, திருப்புவனம் மற்றும் பழனி ஆகிய ஐந்து ஆலயங்களில் வைக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது. ஆனால், காலப்போக்கில் பழனி திருச்சபையில் வைக்கப்பட்ட ஆலய மணியானது, பழனியில் புகழ்பெற்ற பழனிதண்டாயுதபாணி திருக்கோயிலுக்கு இந்த ஆலயமணி வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆலய மணி ஓசையின் மூலம் சுற்றியுள்ள விவசாய கூலி மக்கள் நாட்காட்டியாக பயன்பட்டுள்ளது. இந்த ஆலயமணி கொடுத்ததற்கு காரணம் அன்று சமய நல்லிணக்கத்திற்காக கொடுக்கப்பட்டுள்ளது.

## அருள்திரு. லாரன்ஸ் கோகிலாபுரம் மற்றும் ஆணைமலையான்பட்டியில் மிஷனெரி பணி :

அமெரிக்கன் மதுரா மிஷன் மூலம் லாரன்ஸ் அவர்கள் நற்செய்தி பணியை கோகிலாபுரம் மற்றும் அதை சுற்றியுள்ள கிராமங்களில் இயேசுவைப்பற்றி அறிவித்தார். 1843 ஆம் ஆண்டு கோகிலாபுரத்தில் திருச்சபை உருவாக்கினார். இதை தொடர்ந்து கோம்பை பகுதியில் தன்னுடைய மிஷனெரி பணியை ஆரம்பித்தார்.

## அருள்திரு. லாரன்ஸ் கோம்பை நகரின் மிஷனெரி பணி:

1843 ஆம் ஆண்டு அருள்திரு. ஜான் ஜே லாரன்ஸ் திண்டுக்கல்லில்லிருந்து கோகிலாபுரம் வரை அலைந்து திரிந்து நற்செய்தி பணியாற்றிக் கொண்டியிருந்தார். இதைக் கேள்விப்பட்ட மறைந்த கோம்பை ஜமீந்தாரின் மகன் திரு. குழந்தை வேலுப்பிள்ளை மிஷனெரியைச் சந்தித்து, அவரோடு பல வாரங்கள் தங்கியிருந்து இயேசு கிறிஸ்துவைப் பற்றி அறிந்து கொண்டார். 1843 ஆம் ஆண்டு ஜீன் மாதம் திண்டுக்கல் ஆலயத்தில் 'நத்தானியேல்' என்ற பெயரில் ஞானஸ்நானம் பெற்று கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபையில் தன்னை இணைத்துக் கொண்டார். இவர் கோம்பையில் ஜமீந்தார் வீட்டிலே தங்கியிருந்தார். ஞானஸ்நானம் பெற்று கோம்பைக்குச் சென்று ஜமீந்தாருக்கும், அவருடைய உறவினர்களுக்கும் மற்றும் கோம்பை நகரிலுள்ள மக்களுக்கும் இயேசு கிறிஸ்துவைப் பற்றி அறிவித்தார். கோம்பையில் திருச்சபை உருவாக்கப்பட்டபின் கோம்பை திருச்சபையின் முதல் உபதேசியராக பணியாற்றினார்.

## அருள்திரு. லாரன்ஸ் மூலம் கோம்பையில் திருச்சபை உருவான விதம் :

கிறிஸ்தவராக மாறிய திரு. நத்தானியேல் என்ற தன்னுடைய சகோதரன் மூலமாய் இயேசுகிறிஸ்துவைப் பற்றியும், அருள்திரு. ஜான் ஜே லாரன்ஸ் மிஷனெரி பற்றியும் கேள்விப்பட்ட கோம்பை ஜமீந்தார். இயேசு கிறிஸ்துவை அறிந்து கொண்டவராய், தன்னைப் போல கோம்பை மக்களுக்கும் இயேசுகிறிஸ்துவை அறிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தோடு, 1844 ஆம் ஆண்டு கோம்பையிலிருந்து திண்டுக்கல் சென்று மிஷனெரியைப் பார்த்து கோம்மைபக்கு வருமாறு இவ்வாறு அழைக்கிறார்.

**'இந்த விக்கிரகங்கள் எல்லாம் வெறுமை,**
**வெறும் கற்கள் என்பது எனக்குத் தெரியாதா**
**எங்கள் ஊருக்கு வந்து, எங்களுக்கு இயேசுவைப்**
**பற்றிக் கற்றுக் கொடுங்கள். உங்களால் பயிற்று**
**விக்கப்பட்ட ஒரு சிறிய நாயைப் போல நான்**
**உங்களுக்காக இருப்பேன்.**

மிஷனெரி பதிலாக கேட்டார். உங்களுக்கு இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள விருப்பமா? உங்கள் மக்கள் எல்லாம் இயேசுவைப்பற்றி அறிந்து கொள்ள கிறிஸ்துவர்களாய் மாற சம்மதிப்பார்களா? அதற்கு ஜமீந்தார் மிஷனெரிடம் சொன்ன பதில்.

'எறும்புகள் இனிப்பை ருசிபார்த்த பின்பு, அவைகளை இனிப்பை சுவைக்க வைக்க கூலிக்கு அமர்த்த வேண்டுமா?

மேலும் கோம்மையில் கிறிஸ்தவ ஆலயம் கட்டுவதற்கு நான் உதவுவதாக மிஷனெரியிடம் வாக்குறுதி கொடுத்துவிட்டு கோம்பைக்கு வந்தார். மீண்டும் மறு ஞாயிற்றுக்கிழமை திண்டுக்கல் சென்று ஆலய ஆராதனையில் மற்ற சாதாரண மக்கள் அமர்ந்திருந்த நிலையில் தானும் உட்கார்ந்து ஆராதனையில் பங்கு கொண்டார். இதைப் பார்த்த மிஷனெரி ஆச்சரியத்தில் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

'இந்த சம்பவம், இந்தியாவில் தனிச் சிறப்புப்பட்டம் பெற்ற எவரும் மிஷனெரி ஊழியம் ஆரம்பித்த இதுவரை செய்யாத ஒரு காரியமாய் இருக்கிறது.'

## ஜமீந்தார் குடும்பத்திற்கும் அருள்திரு. லாரன்சுக்குமுள்ள ஐக்கியம்:

கோம்பை நகரின் முதல் கிறிஸ்தவர் கோம்பை ஜமீந்தார் மகன் திரு. குழந்தை வேலுப்பிள்ளை என்ற நத்தானியேல் ஆவார். கோம்பை மக்களுக்கு இயேசுகிறிஸ்துவைப்பற்றி அறிவிக்க வாருங்கள் என்று 1844 ஆம் ஆண்டு கோம்பை ஜமீந்தாராய் இருந்தவர் திண்டுக்கல் சென்று அருள்திரு. ஜான் ஜே லாரன்ஸ் மிஷனெரியை வருந்தி அழைத்துக்கொண்டு வந்து, தன்னிடமிருந்த முக்கியமான, விலையுயர்ந்த இடத்தை கிறிஸ்தவ ஆலயம் கட்ட இலவசமாகக் கொடுத்தார். இதோடு திருச்சபைக்கும் ஜமீந்தார் குடும்பத்திற்கும் உள்ள தொடர்புகளும், ஐக்கியங்களும் நின்றுவிடாமல் வரலாற்றில் தொடர்ந்து இருந்து கொண்டே இருந்திருக்கின்றது. ஜமீந்தார் குடும்பத்தினர் ஞானஸ்நானம் பெற்று தைரியமாய் தங்கள் வாழ்நாள் முழுவதும் இயேசுவை ஏற்றுக்கொண்டு இயேசு கிறிஸ்துவுக்காய் உறுதியான சாட்சிகளாய் வாழ்ந்திருக்கிறார்கள்.

## இவர்களைப் பற்றி மிஷனெரிமார் குருமார் எழுதிய சில குறிப்புகள்

1845 ஆம் ஆண்டு மார்ச் 8 ஆம் தேதி அருள்திரு ஜான் ஜே லாரன்ஸ் எழுதியநாட்குறிப்பில் இவ்வாறு எழுதியிருக்கிறார். திரு. நத்தானியேல் மற்றும் திரு. வில்சன் என்ற உபதேசிமார்கள் கோம்பையிலிருந்து திண்டுக்கல் வந்து அருள்திரு. ஜான் ஜே லாரன்ஸ் மிஷனெரிடம் இவ்வாறு கூறுகிறார்கள். ஏற்கனவே, ஜமீந்தாரால் கொடுப்பேன் என வாக்குறுதி செய்யப்பட்ட நிலத்தை நீங்கள் சீக்கிரமாய் பெற்றுக்கொள்ள வேண்டுமென ஜமீந்தார் மாமனார் மிகவும் ஆர்வமுள்ளவராயிருக்கிறார். ஆட்டுத் தோலில் ஒரு நிலப்பகுதியை வரைந்து, அதை பெற்றுக் கொள்ளும்படி நவாப் கிழக்கிந்திய கம்பெனிக்கு தூது அனுப்பினார். என்றும் பின்பு இந்தியா முழுவதும் கிழக்கிந்திய கம்பெனி ஆளுகைக்குள் வந்து விட்டது என்ற குறிப்பை உங்களிடம் சொல்லச் சொன்னார்.

இன்று கோம்பையில் மிகப்பெரிய ஆலயம் வளர்ந்து புதிய பொழிவுடன் காணப்படுகிறது. இந்த ஆலயம் அருள்திரு. ஜான் ஜே லாரன்ஸ் அவர்ளுடைய நினைவாலயமாக திகழ்கின்றது.

## அருள்திரு. லாரன்சுவின் பெரியகுளத்தில் மிஷனெரி பணி :

1845 ஆம் ஆண்டுக்கு பிறகு பெரியகுளம் கோட்டைமேடு பகுதியிலும் அதைச் சுற்றியுள்ள பகுதியிலும் தன்னுடைய மிஷனெரி பணியின் மூலம் ஒரு ஆலயத்தை நிறுவினார். அநேக மக்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு திருச்சபையில் அங்கத்தினராக மாறினார்கள். இன்றும் இந்த ஆலயம் பெரிய அளவில் வளர்ச்சி பெற்று இரண்டு குருசேகரங்களாக வளர்ந்து நிற்கின்றது.

## அருள்திரு. லாரன்சுவின் குணநலன்கள்:

1. ஜெபத்திலும், வேதத்திலும், நற்செய்தி சொல்வதிலும் ஆர்வமுள்ளவர்.
2. அருள்திரு. ஜான் ஜே லாரன்ஸ் அவர்கள் சுறுசுறுப்பான விடாமுயற்சி நற்செய்தியாளர்.
3. மிஷனெரி பணியில் மூலை முடுக்குகளிலும், பட்டி தொட்டிகட்கெல்லாம் அவர் நடந்து செல்வதில் விறுவிறுப்பானவர்.
4. சிலைகளை வழிபடுபவர்களை பார்த்தால் அதே இடத்தில் சிலையை உடைப்பதிலும், குச்சியை வைத்து அடிப்பதிலும் தைரியமானவர்.
5. 'பழனி பகுதியில் ஒரு நாள் ஒரு பாட்டி மண் சிலையை வணங்கிக்கொண்டியிருக்கும் போது லாரன்ஸ் தன் கையிலிருந்த குச்சியை வைத்து அடித்து உடைத்துப்போட்டார்'. பிராமணர்கள் அவரைப் பிடித்து கலெக்டரிடம் ஒப்படைத்து ஆயிரக்கணக்கான பணத்தை நஷ்ட ஈடு கேட்டு போராடினார்கள். கலெக்டர் அந்த சிலையின் செலவுள்ள பணத்தை கொடுக்க தீர்ப்பளித்தார்.
6. கல்வியின் மூலம் அநேகரை படிக்க வைக்க வேண்டும் என்ற மனம் உள்ளவர்.
7. ஏழை, எளிய மக்கள் மீது அன்பு கொண்டவர்.

## அருள்திரு. ஜான் ஜே லாரன்ஸ் மரணம்:

திருச்சிராப்பள்ளி என்ற இடத்தில் சீதபேதி என்ற நோய் அவரைத் தாக்கியது. இந்த நோயின் கொடூரம் அதிகமானதால், மருத்துவர்கள் அவரை உடனடியாக கடற்கரைக்கு செல்ல வேண்டும் என வற்புறுத்தவே, தரங்கம்பாடி சென்றார். மேலும் நோயின் பாதிப்பு அதிகரிக்கவே, அமெரிக்காவிற்கு புறப்படுகின்ற நேரங்களில் தரங்கையில் 1846ஆம் ஆண்டு டிசம்பர் 20 ஆம் தேதி தன்னுடைய 39 ஆவது வயதில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். அவருடைய சரீரம், இந்தியாவிற்கு முதன் முதலாவதாக வந்த புராட்டஸ்டண்ட் மிஷனெரிமார்கள் அடக்கம் செய்யப்பட்ட கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டது, இன்றும் தரங்கம்பாடியில் லாரன்ஸ் அவர்களுடைய கல்லறை தோட்டம் உள்ளது. இவருடைய மரண நேரத்தில் இவருடைய மனைவியும் பிள்ளைகள் 3 பேரும் அமெரிக்கா தேசத்தை நோக்கி கப்பலில் பிரயாணம் செய்து கொண்டிருந்தார்கள். இவருடைய பணி இன்றும் மதுரை, திண்டுக்கல், பழனி, பெரியகுளம், கோகிலாபுரம் மற்றும் கோம்பை ஆலயங்களில் பேசப்படுகிறது. தேனி மாவட்டம் கோம்பை நகரில் இன்றும் இவருடைய பெயரில் மாபெரும் ஆலயம் கட்டப்பட்டு நினைவாகவும், சாட்சியாகவும் இருக்கின்றது.



நெல்லை மாவட்டம்

# மேல உப்பூரணி திருச்சபை வரலாறு

ஜா.ஜான் ஞானராஜ்
திருநெல்வேலி



திருநெல்வேலி மாவட்டத்தின் தென்மேற்கு பகுதியில் திருநெல்வேலியில் இருந்து தென்மேற்கே சுமார் 20 கிலோமீட்டர் தொலைவில் மேல உப்பூரணி கிராமம் அமைந்துள்ளது. நாகர்கோவிலில் இருந்து பாபநாசம் செல்லும் மாநில நெடுஞ்சாலையில் களக்காட்டிற்கும் சேரன்மகாதேவிக்கும் இடையில் உள்ள கங்கனான்குளத்தில் இருந்து கிழக்கே சுமார் 5 கிலோமீட்டர் தொலைவில் இக்கிராமம் உள்ளது.

**பெயர் காரணம்**

உப்பூருணி எனும் ஊரணியின் கிழக்கே அமைந்துள்ள கிராமம் கீழ் உப்பூருணி என்றும் மேற்கே அமைந்துள்ள மேல உப்பூருணி என அழைக்கப்பட்டுள்ளது. கீழ் உப்பூருணி கிராமம் நாங்குநேரி தாலுகாவிலும் மேல உப்பூருணி கிராமம் சேரன்மகாதேவி தாலுகாவிலும் உள்ளது குறிப்பிடத்தக்கது. கீழ உப்பூருணி மற்றும் மேல உப்பூருணி என்றே தொடக்க காலத்தில் இவ்விரு கிராமங்கள் அழைக்கப்பட்டிருப்பதை இக்கிராமங்களின் தொடக்க கால ஞானஸ்நானப் பதிவேடுகள் உறுதிப்படுத்துகிறது. உப்பூருணி என்பது உப்பூரணி என மருவியுள்ளது.

**மேல உப்பூரணி கிராம உருவாக்கம்**

இடையன்குளத்தைப் போன்று மேல உப்பூரணி கிராமத்திலும் தொடக்க காலம் முதல் பல சமூகத்தினர் ஒருவருக்கொருவர் ஒற்றுமையாக வாழ்ந்து வந்துள்ளனர். சிறிய கிராமமாக இருந்தாலும் மேல உப்பூரணி கிராமத்தில் ஆதிதிராவிடர்கள், இஸ்லாமியர்கள் பிள்ளைமார்கள் (சைவ

வேளாளர்), நாடார்கள், மறவர்கள் என பல சமூகத்தினர் வாழ்ந்துள்ளனர்.

நாடார்கள் குடியேற்றம் மேல உப்பூரணியில் ஏற்படுவதற்கு முன்னரே இஸ்லாமியர்களும் ஆதிதிராவிடர் (பறையர்) சமூகத்தினரும் இக்கிராமத்தில் வசித்துள்ளனர். இஸ்லாமியர்கள் தற்போது நடுவூர் என்று அழைக்கப்படுகிற பகுதியில் சிதைவடைந்த நிலையில் உள்ள பள்ளிவாசல் அருகில் வசித்துள்ளனர். மேல உப்பூரணி நடுஊரில் இஸ்லாமியர் வசித்த பகுதிக்கு வடபகுதியிலும் மேல உப்பூரணி ஊரின் வடபகுதியில் உள்ள மேடான பகுதியான பறைச்சேரிமேடு என்று அழைக்கப்படுகிற பகுதியிலும் கணிசமான எண்ணிக்கையில் ஆதிதிராவிடர்கள் வசித்துள்ளனர். காலப்போக்கில் இஸ்லாமியர்கள் பேட்டைக்கும் ஆதிதிராவிடர்கள் பத்தமடைக்கும் சென்று விட்டதால் தற்போது இவ்வூரில் அந்த இரு சமூகங்களும் இல்லை.

நாடார்கள் மூன்று குழுக்களாக மேல உப்பூரணியில் குடியேறியுள்ளனர். தற்போது நாடார்கள் மட்டுமே இவ்வூரில் வசித்து வருகிறார்கள். சைவ வேளாளர் எனப்படும் பிள்ளைமார்களும் மறவர்களும் தற்போது மேல உப்பூரணி பஸ் ஸ்டாப்பிற்கு அருகில் பஸ் ஸ்டாப்பில் இருந்து தெய்வநாயகப்பேரி எனும் M. சமாதானபுரத்திற்கு செல்லும் வழியில் வசித்துள்ளனர். காலப்போக்கில் பிள்ளைமார்கள் திருநெல்வேலி டவுன் பகுதிக்கும் மறவர்கள் சிங்கிகுளத்திற்கும் பாப்பாக்குடிக்கும் சென்று விட்டனர். தற்போது இவ்விரு சமூகங்களும் மேல உப்பூரணியில் இல்லை.

### குடியேற்றம் – தெற்கு, வடக்கு மற்றும் நடுவளசல்

மூன்று குழுக்களின் பூர்வீகமும் கீழ்காடு எனப்படும் தேரி வட்டார பகுதி என அறிய முடிகிறது. முதல் நாடார் குழுவினர் மேல உப்பூரணியில் குடியேறுகையில் மேல உப்பூரணியில் இருந்து தெய்வநாயகப்பேரிக்கு செல்லும் குளத்தின் கரையோரப் பகுதியில் தாங்கள் கொண்டு வந்த பிடிமண்ணைக் கொண்டு நீலகண்ட உத்தம உடையார் சாஸ்தா கோயிலை நிறுவினர். மேல உப்பூரணி கிராமத்தின் மத்தியில் செல்லும் நெடுஞ்சாலையின் தென்புறமும் வடபுறமுமாக இவர்கள் குடியேறினர். தென்புறம் குடியேறியவர்கள் தெற்கு வளசல் என்றும், வடபுறம் குடியேறியவர்கள் வடக்கு வளசல் என்றும் அழைக்கப்படுகின்றனர். இந்த தெற்கு மற்றும் வடக்கு வளசல் சார்ந்த குடும்பத்தினர் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் ஆவர். இந்த தெற்கு மற்றும் வடக்கு வளசல் குடும்பத்தினர் சேர்ந்து தங்களது வழிபாட்டிற்கென மேல உப்பூரணியின் தென் பகுதியில் மூர்த்தி மாடசாமி கோயிலைக் கட்டி வழிபட்டு வந்தனர். இந்த முதல் நாடார் குழுவினர் குடியேறிய பின் அதே காலகட்டத்தில் வள்ளியூர் பகுதியில் இருந்து வள்ளியூர் சாஸ்தாவை குலதெய்வமாக வழிபட்டு வந்த இரண்டாம் நாடார் குழுவினர் மேல உப்பூரணியின் கீழ்பகுதியில் குடியேறினர். அவர்கள் குடியேறிய பகுதி நடுஊர் என அழைக்கப்படுகிறது. அங்கு குடியேறிய அந்த குடும்பத்தினர் நடுவளசல் குடும்பத்தினர் என்றழைக்கப்படுகின்றனர். நடுவளசல் குடும்பத்தினர் தங்களது வழிபாட்டிற்கென தாங்கள் குடியிருந்த பகுதியியில் பத்ரகாளியம்மன் கோயிலை நிறுவினர். தொடக்க காலத்திலேயே தெற்கு வளசல் மற்றும் வடக்கு வளசல் குடும்பத்தாரோடு நடுவளசல் குடும்பத்தினர் பெண் கொடுத்து பெண் எடுத்து திருமண உறவுகளை மேற்கொண்டு மாமன் மச்சினன் உறவுமுறை உடையவர்களாயினர். அந்த உறவுமுறையைத் தொடர்கின்றனர்.

### ரேனியஸ் ஐயரவர்களின் வருகையும், தென்மேற்கு நெல்லையில் கிறிஸ்தவமும்

1820 முதல் நெல்லை அப்போஸ்தலர் ரேனியஸ் ஐயரவர்கள் பாளையங்கோட்டையைத் தலைமை இடமாகக் கொண்டு அக்கால ஒருங்கிணைந்த திருநெல்வேலி மாவட்டம் முழுவதும் குதிரை மூலம் நற்செய்தி அறிவித்து வந்தார். தற்போதைய சேரன்மகாதேவி, நாங்குநேரி தாலுகாக்கள் மற்றும் ராதாபுரம் தாலுகாவின் மேற்கு பகுதி ஆகியவை அக்காலத்தில் தென்மேற்கு நெல்லை என்று அழைக்கப்பட்டது. திருநெல்வேலி திருமண்டலத்தில் தென்மேற்கு சபை மன்றமாக இது அறியப்படுகிறது. இதன் தலைமை இடமாக டோனாவூரும் துணைத்தலைமை இடமாக இடையன்குளமும் நீண்ட நாட்களாக இருந்தது. தென்மேற்கு நெல்லையில் மேல உப்பூரணிக்கு அருகில் இருந்த கிராமங்களில் 1824 இல் கோவிந்தபேரி மற்றும் நெடுவிளை, 1826 இல் புலியூர்குறிச்சி, 1825 இல் கரிசல், ஓடைக்கரை, துலுக்கப்பட்டி, துவரைகுளம், 1827 இல் இடையங்குளம், டோனாவூர், நல்லமரம், மாவடி, தோப்பூர், நெருஞ்சிவிளை ஆகிய கிராமங்களும் கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்டன.

### ரேனியஸ் மற்றும் பெற்றிட் ஆகிய தலைமை கண்காணிப்பு மிஷனெரிகளின் காலத்தில்

ரேனியஸ் ஐயரவர்கள் தமது ஊழிய காலத்தில் (1820 - 1835) தமது மிஷனெரி பணி குறித்து எழுதிய மிஷன் ரிப்போர்ட்களில் இரட்டை கிராமங்களாகக் காணப்படும் மேல உப்பூரணி மற்றும் கீழ உப்பூரணி கிராமப் பெயர்கள் இடம் பெறவில்லை, ஆனால் இவ்விரு கிராமங்களைச் சுற்றிலும் இருக்கிற பல்வேறு கிராமங்களின் பெயர்கள் அதில் இடம் பெற்றுள்ளது. அதேபோன்று பெற்றிட் தமது ஊழிய காலத்தில்



தூய.தோமா ஆலயம் (பழைய ஆலயம்) மேல உப்பூரணி

(1835 - 1847) எழுதிய மிஷன் ரிப்போர்ட்களில் இவ்விரு கிராமங்களின் பெயர்களும் இடம் பெறவில்லை. அக்காலங்களில் இவ்விரு கிராமங்களும் தனித்தனி கிராமங்களாக உருவாக்கம் பெறாமல், தனித்தனி வீடுகளாகக் கொண்ட குக்கிராமங்களாக களக்காடு - மேலச்செவல் நெடுஞ்சாலையில் இருந்து பிரிந்து கரிசல் வழியாக கங்கனான்குளம் செல்லும் சாலையில் இருந்துள்ளது என்பதை மாத்திரமே யூகிக்க முடிகிறது.

**மேல உப்பூரணியில் கிறிஸ்தவம் (1880)**

பேராயர் மகாகனம். சார்ஜென்ட் அவர்கள் தலைமை கண்காணிப்பு மிஷனெரியாக (1852-1876) மற்றும் பேராயராகப் பணி செய்த காலத்தில் (1877-1889) நற்செய்திப் பணி தீவிரப்படுத்தப்பட்டது. இடையன்குளம் சர்க்கிள் சேர்மன் கனம். சாமுவேல் ஐயரவர்கள் நற்செய்தி பணியை சிறப்பாக செய்தார்கள். 1880 இல் மேல உப்பூரணி கிராமத்தில் கிறிஸ்தவத்தை ஏற்ற பிச்சமுத்து - அன்பாயி தம்பதியர் அருகில் உள்ள சபைக்குச் சென்று ஞானஸ்நானம் பெற்றுள்ளனர். இதை மேல உப்பூரணி சபை உருவான முதல் நாளில் நடைபெற்ற பருவம் கடந்த ஞானஸ்நானம் மற்றும் குழந்தைகள் ஞானஸ்நானப் பதிவேடுகள் மூலம் அறிய முடிகிறது ஒரே நாளில் நடைபெற்ற இந்த இரு தரப்பு ஞானஸ்நானங்களில் அருகில் உள்ள சபைக்கு சென்று ஞானஸ்நானம் பெற்ற பிச்சமுத்து - அன்பாயி குடும்பத்தின் குழந்தைகள் முதன்முதலாக இந்த முதலாம் ஞானஸ்நானத்தில் ஞானஸ்நானம் பெற்றுள்ளனர். அதன் மூலம் இந்த காரியத்தை அறிய முடிகிறது.

**மேல உப்பூரணி சபை தோற்றம் -20. 02. 1881**

மேல உப்பூரணியில் 1881 பிப்ரவரி மாதம் இருபதாம் நாள் முதன்முதலாக பருவம் கடந்தோர் ஞானஸ்நானமும் குழந்தைகள் ஞானஸ்நானமும் ஒரே நாளில் நடைபெற்றது. லெட்சுமண நாடார் - உமையாள் தம்பதியரின் மகன் இராமலிங்க நாடார் என்ற 50 வயது பெரியவர் தேவசகாயம் என்ற பெயரில் திருமுழுக்கு பெற்றார். 1881 பெப்ரவரி மாதம் 20 ஆம் நாள் மேல உப்பூரணி சபையில் நடைபெற்ற ஞானஸ்நான பெருவிழாவில் பருவங்கடந்த பெரியோர் 16 பேரும் (Adult Babtism Register Sl Nos from 242 to 257) அவர்களது குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகள் 14 பேரும் (Children Baptism Register Sl Nos from 192 to 205) ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்கள்.

மேற்கண்ட அனைவரும் லெட்சுமண நாடாரின் மகன் தேவசகாயம் இராமலிங்க நாடார், சுடலைமுத்து நாடார், திருமலையாண்டி நாடார், பிச்சமுத்து நாடார், சுப்பிரமணிய நாடாரின் மகன்கள் சு. ஞானக்கண் நாராயணன் நாடார், மோட்சக்கண் இராக்காயி நாடார் மாட நாடார், தாவீது நாடார், சித்திரபுத்திரன் நாடார் நல்ல தம்பி நாடார் ஆகிய குடும்பத்தைச் சார்ந்தவர்கள். மேற்கண்ட குடும்பத்தாரில் பிச்சமுத்து நாடார் அன்பாயி தம்பதியர் ஏற்கனவே பருவம் கடந்த ஞானஸ்நானத்தை பெற்றவர்கள். இவர்களே மேல உப்பூரணி திருச்சபையின் முதல் கிறிஸ்தவ குடும்பத்தார். இவர்களுக்கு அருகில் உள்ள சபையில் 1880 இல் ஞானஸ்தானம் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். இவர்களது ஞானஸ்நானத்தின் போது இவர்களது பிள்ளைகளுக்கு குழந்தைகள் ஞானஸ்நானம் கொடுக்கப்படவில்லை. குழந்தைகள் ஞானஸ்தானத்தை இவர்களது பிள்ளைகள் மேல உப்பூரணியில் நடைபெற்ற முதல் ஞானஸ்நான பெருவிழா ஆராதனையில் 20. 02. 1881 பெற்றுள்ளனர். பருவம் கடந்த ஞானஸ்நானம் பெற்றவர்களில் முதல் 13 பேருக்கான குறிப்புகளில் வசிக்கும் இடம் மேல உப்பூரணி என குறிப்பிடப்பட்டுள்ளது. கடைசி மூவருக்கான குறிப்புகளில் வசிக்கும் இடம் குருக்கள் இடையன்குளம் என குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த இடம் மேல உப்பூரணியின் கீழ்பகுதியில் உள்ள நடு ஊர் என்பதாகும். இந்த இடம் தொடக்க காலத்தில் பூங்குடையார்குளம் என்றும் அதன் பின்னர் குருக்கள் இடையன்குளம் என்றும் அதன் பின்னர் இனாம் இடையங்குளம் என்றும் அரசு பதிவுகளில் குறிப்பிடப்படுகிறது.

**1881 டயோசிசன் ஞானஸ்நான பதிவேடுகளில் ...**

1881 இல் திருமுழுக்கு பெற்ற அனைவரும் தெற்கு வளசல் மற்றும் நடுவளசல் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் என்பதை குடும்ப குறிப்புகள் மூலம் அறிய முடிகிறது. மேல உப்பூரணி ஊர் பெரியவரும் 90 வயதை உடையவருமான வெற்றிவேல் நாடார் அவர்கள் முன்னோர் பெயர் குறிப்புகளைக் கொண்டு உறுதிப்படுத்துகிறார்கள். இந்த ஞானஸ்நானங்களில் பெரும்பாலானவற்றிற்கு அப்போதைய மேல உப்பூரணி சபையின் முதல் சபை ஊழியர் திரு. யாக்கோபு வாத்தியார் மற்றும் அவரது மனைவி ஏசுவடியாள் இருவரும் சாட்சிகளாக ஞானப்பெற்றோராக இருந்துள்ளனர். இந்த ஞானஸ்நானங்களில் ஞானஸ்நானம் பெற்ற அநேகர் பின்வாங்கி போனார்கள். ஆனால் அவர்களுக்கு அடுத்த தலைமுறையினரில் அனேகர் மீண்டும் கிறிஸ்தவர் ஆயினர்.

**உவாக்கர் மற்றும் E. S. கார் ஆகிய இரு தலைமை கண்காணிப்பு மிஷனெரிகளின் காலம் -**

பேராயர். சார்ஜென்ற் அவர்களுக்குப் பின்னர் உவாக்கர் (1885 - 1900) மற்றும் E. S. கார் (1887 - 1915) ஆகிய இரு தலைமை கண்காணிப்பு மிஷனெரிகளும் பாளையங்கோட்டையைத் தலைமை இடமாகக் கொண்டு மிஷன் பணி செய்த காலத்தில் மேல உப்பூரணி சபை சிறந்த வளர்ச்சியைப் பெற்றது. இப்பகுதி ஊழியங்களுக்கு தலைமை கண்காணிப்பு மிஷனெரி கனம் E. S. கார் (1887 - 1915) மிகுந்த முக்கியத்துவம் அளித்தார்.

**மேல வளசல் எனும் மூன்றாம் நாடார் குடும்பத்தின் குடியேற்றம்**

மேல வளசல் எனும் மூன்றாம் நாடார் குடும்பத்தினர் தொடக்க காலத்தில் பொன்னாக்குடி கிராமத்தின் கீழ்புறம் கருப்பு கட்டி கிராமத்தில் உள்ள கடம்பன்குளத்தின் கரையோரம் அமைந்துள்ள சாஸ்தாவை குல தெய்வமாக வழிபாடு செய்து அங்கு வசித்து வந்துள்ளனர். முதலிரு நாடார் குழுக்கள் மேல உப்பூரணியில் குடியேறியதற்கு பின்னர் கருப்புகட்டியிலிருந்து மேலவளசல் குடும்பத்தார்கள் தங்களது குடும்பத் தலைவர்களான சகோதரர்கள் பிச்சக்கார நாடார் மற்றும் சுடலைமுத்து என்ற முத்து நாடார் தலைமையில் வெளியேறி மேல உப்பூரணியில் குடியேறினார்கள். அவ்விருவரில் சுடலைமுத்து என்ற முத்து நாடார் குடும்பமாக மேல உப்பூரணியை விட்டு வெளியேறி கீழ உப்பூரணியில் குடியேறினார். மேல உப்பூரணியின் மேற்கு பகுதியில் குடியேறினர். இவர்கள் தங்களது வழிபாட்டுக்கென மந்திரமூர்த்தி கோயிலை மேல உப்பூரணியில் நிறுவியிருந்தனர்.

**மேல வளசல் குடும்பத்தில் கிறிஸ்தவம்**

தெற்கு வளசல் மற்றும் நடு வளசல் குடும்பத்தார் கிறிஸ்தவரான பின்னர் கிறிஸ்தவத்தை ஏற்ற மேலவளசல் குடும்பத்தாருக்கும் கரிசல் கிராமக் கிறிஸ்தவர்களுக்கும் இடையே ஏற்பட்ட திருமண உறவுகள் மூலம் குறிப்பாக கரிசலில் இருந்து திருமணம் காரணமாக வந்த முதலிரு பெண்கள் மூலம் மேலவளசல் குடும்பத்தார் அனைவரும் படிப்படியாக முழுமையாக கிறிஸ்தவத்தை ஏற்றனர். அதன் மூலம் மேல உப்பூரணியில் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை உயர்ந்தது. நீண்ட பல ஆண்டுகளாக இந்துக்களாக இருந்த வடக்கு வளசல் குடும்பத்திலும் சில குடும்பத்தினர் படிப்படியாக கிறிஸ்தவத்தை ஏற்றதால் தற்போது மேல உப்பூரணியில் கிறிஸ்தவர்கள் பெரும்பான்மையாக உள்ளனர்.

**சுத்தாங்க பிரிவினை-1924**

1870 களில் ஆக்ஸ்போர்டு இயக்கம் எனும் சடங்காச்சார இயக்கம் ஆங்கிலிக்கன் திருச்சபையில் புகுந்தது. SPG மிஷனிலும் சபை போதகர்களிலும் ஆக்ஸ்போர்டு இயக்கத்தின் தாக்கம் அதிகமாக இருந்தது. அவர்கள் SPG சபைகளில் சடங்காச்சாரங்களை நடைமுறைப்படுத்தி வந்தனர்.

1919 முதல் CMS மற்றும் SPG மிஷன் சங்க சபைகள் ஒரே ஐக்கியத்தில் செயல்பட செயல் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட தொடங்கியது. தேவாலய ஆல்டர் மேஜையில் சிலுவை வைக்க வேண்டும் எனும் தீர்மானம் CMS மற்றும் SPG மிஷன்களை உள்ளடக்கியதாக அமைக்கப்பட்டிருந்த டயோசிசன் கவுன்சிலில் 1919 இல் கொண்டுவரப்பட்டது. அதை அந்த கூட்டத்தில் கனம். சாலமோன் பாக்கியநாதன் தலைமையில் CMS சபையார் கடுமையாக எதிர்த்தனர். சடங்காச்சாரங்கள் இல்லாத சுத்த சுவிசேஷம் என்ற சுத்தாங்க சுவிசேஷ கொள்கையை அடிப்படையாகக் கொண்ட CMS மிஷனின் சபைகளுக்குள் SPG மிஷனின் சடங்காச்சாரங்கள் டயோசிசன் கவுன்சிலால் புகுந்துவிடும்எனஅஞ்சினர். இந்தஅச்சம்காரணமாகஆழ்வாநேரி சர்க்கிள் சேர்மன் கனம். அருள்மாணிக்கம் மருதகுளம் கனம். சாலமோன் பாக்கியநாதன், கனம். வேதக்கண், மாவட்ட விவாக பதிவாளர் ஜான் விசுவாசம் சாமுவேல், தாசில்தார் மோசஸ் சீனிவாசகம், சுவிசேஷகர் தாவீது ஐயா ஆகிய ஆறுபேர் மற்றும் புலவன் குடியிருப்பு பெருநிலக்கிழார் ஸ்ரீமான். சத்தியவாசகம் நாடார் போன்ற பெரியோர்கள் இணைந்து ஒன்றுபட்ட டயோசிசன் கவுன்சில் அமைப்பை 1924 இல் வலிமையாக எதிர்த்தனர். அதை டயோசிசன் நிர்வாகம் பொருட்படுத்தாத படியால் 1924 இல் CMS சுத்தாங்க சுவிசேஷ திருச்சபை எனும் தனி சபையை நிறுவினார்கள்.

**1924 - சுத்தாங்க சுவிசேஷ திருச்சபை உருவான போது மேல உப்பூரணி சபை**

மேல உப்பூரணி கரிசல் கிராமத்திலிருந்து இரண்டு கிலோமீட்டர் தொலைவிற்குள் உள்ள ஒரு கிராமம். CMS சுத்தாங்க சுவிசேஷ திருச்சபை 1924 இல் உருவானது. அதன் ஆறு நிறுவனர்களில் ஒருவரான கரிசல் சபை ஊழியர் சுவிசேஷகர் சங்கை. தாவீது ஐயா அவர்கள் மேல உப்பூரணி சபை மக்களோடு நெருங்கிய தொடர்பில் இருந்தபடியாலும் கரிசல் சபையோடு மேல உப்பூரணி சபைக்கு இருந்த நெருங்கிய திருமண உறவு தொடர்பாலும் மேல உப்பூரணி சபையார் அனைவரும் முழுமையாக சுத்தாங்க சுவிசேஷ திருச்சபையில் இணைந்தனர். மேல உப்பூரணி டயோசிசன் சி. எம். எஸ் தேவாலயம் இருந்த இடம் டயோசிசனின் சி. எம். எஸ் மிஷன் சங்கத்துக்குச் சொந்தமானதாக இருந்தபடியால் அந்த தேவாலயத்தை மேல உப்பூரணி சபையார் முழுமையாக சுத்தாங்க சுவிசேஷ சபையாக மாறிய போதும் சுத்தாங்க சுவிசேஷ சபை தேவாலயமாகப் பயன்படுத்த இயலவில்லை. ஆதலால் தாங்கள் தேவாலய வழிபாடு செய்ய டயோசிசன் தேவாலயத்திற்கு அருகில் ஒரு இடத்தை வாங்கி தேவாலயத்தை கட்டி எழுப்பினர்.

**புதுப்பிக்கப்பட்ட CMS டயோசிசன் திருச்சபை**

சுமார் 15 ஆண்டுகளுக்கும் மேலாக தொடக்க கால டயோசிசன் சி. எம். எஸ் தேவாலயம் பூட்டப்பட்ட நிலையில் இருந்தது. 1940 க்கு பின்பாக அக்கால சபை பெரியவர்கள் திரு. மலையாண்டி நாடார் திரு. பாலையா நாடார் குடும்பத்தினர் டயோசிசன் சபையில் சேர்ந்தார்கள். அதன் மூலம் டயோசிசன் சபை தேவாலயம் திறக்கப்பட்டு அந்த தேவாலயத்தில் ஆராதனைகள் நடத்தப்பட்டது. அந்த காலகட்டத்தில் தெற்கு வளசல் ராமையா நாடார் அவர்களது இரு வாலிப மகன்கள் கிறிஸ்தவத்தை ஏற்று ஆபிரகாம், ஏசுதாசன் என்ற பெயரில் திருமுழுக்கு பெற்றார்கள். கிறிஸ்தவ பெண்களை இருவரும் திருமணம் செய்தார்கள். அவர்களுக்குப் பின்னர் வடக்குவளசல் சுப்பையா நாடார் மகன் யாக்கோபு என்ற பெயரில் திருமுழுக்கு பெற்று டயோசிசன் சபையில் சேர்ந்தார்கள். இவ்வாறு டயோசிசன் சபை புதுப்பிக்கப்பட்டு வளர்ச்சியைப் பெறலாயிற்று.

**சுத்தாங்க சுவிசேஷ திருச்சபையும் தேவாலயப் பிரதிஷ்டையும்**

மேல உப்பூரணியில் சி. எம். எஸ் சுத்தாங்க சுவிசேஷ திருச்சபை 1924 இல் தொடங்கப்பட்டது. தேவாலயத்திற்கு தனி இடம் வாங்கப்பட்டு உடனடியாக ஓலை வேயப்பட்ட தேவாலயம் கட்டப்பட்டது. மேற்கூறையாக ஓடு போட்ட காரைக்கட்டிட தேவாலயம் கட்ட வேண்டும் என தீர்மானித்த மேல உப்பூரணி சுத்தாங்க சுவிசேஷ திருச்சபையார் அதற்கான பணிகளை 20. 08. 1964 இல் தொடங்கினார்கள். நான்கு மாதத்தில் வேகமாக கட்டப்பட்ட தேவாலயம் கிறிஸ்து ஆலயம் என்ற பெயரில் 04. 12. 1964 அன்று CMS சுத்தாங்க சுவிசேஷ திருச்சபையின் தலைமைப் போதகர் அருள்திரு. டேனியல் மாசிலாமணி ஐயரவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

வளர்ந்து வந்த மேல உப்பூரணி CMS சுத்தாங்க சுவிசேஷ திருச்சபையார் அமர்ந்து ஆராதிக்க இந்த தேவாலயம் போதுமானதாக இல்லாததால் பெரிதானதோர் தேவாலயம் கட்ட திட்டமிட்டனர். ஆனால் தேவாலயத்தை ஒட்டி வடபுறம் நெடுஞ்சாலை இருந்தபடியால் அதே இடத்தில் பெரிய தேவாலயம் கட்ட வாய்ப்பு இல்லாத நிலை இருந்தது. ஆதலால் தேவாலயத்தில் இருந்து சற்று தென்புறம் தள்ளி புதிய தேவாலய கட்டுமானப் பணி தொடங்கப்பட்டது. புதிய தேவாலயம் கிறிஸ்து மறுரூப ஆலயம் என்ற பெயரில் 25. 05. 2022 அன்று பிரதிஷ்டை செய்யப்பட்டது. மேல உப்பூரணி CMS சுத்தாங்க சுவிசேஷ திருச்சபையின் சபை ஊழியர் ஆக திரு. ஜோஷ்வா அவர்களும், குருவானவர் ஆக

அருள்திரு. பிரெட்ரிக் பால் ஐயரவர்களும் சபை பொறுப்பாளராக திரு. துரைப்பாண்டியன் அவர்களும் சிறப்பாகப் பணி செய்து வருகிறார்கள். மேல உப்பூரணி CMS சுத்தாங்க சுவிசேஷ திருச்சபையில் 110 குடும்பத்தினர் உள்ளனர்.

**டயோசிசன் சபை தேவாலயக் கட்டுமானப் பணியும், பிரதிஷ்டையும்**

1881 இல் மேல உப்பூரணி டயோசிசன் சி. எம். எஸ் திருச்சபையில் முதல் ஞானஸ்நான பெருவிழா நடைபெற்ற காலம் முதல் 1976 வரை பனை ஓலையால் மேற்கூறை அமைக்கப்பட்ட தேவாலயமே வழிபாட்டு இடமாக இருந்து வந்தது. சுமார் பத்து ஆண்டுகளாக கரிசல் சபையைச் சொந்த ஊராகக் கொண்ட திரு ஐசக் சாம் உபதேசியார் மேல உப்பூரணி திருச்சபையில் சபை ஊழியராக பணி செய்து வந்தார்கள். மேற்கூரையாக ஓடு போடப்பட்ட காரைக்கட்டிட தேவாலயம் கட்டுவதற்கு சபை மக்களின் ஆதரவோடு 1976 இல் முயற்சிகளை மேற்கொண்டார்கள் கட்டுமான பொறுப்பாளராக இவர்களே செயல்பட்டார்கள். காரைக்கட்டிட தேவாலயம் கட்டப்பட திருச்சபையின் அக்காலத்து மூப்பர்களான R. ஆபிரகாம் நாடார், R. ஏசுதாசன் நாடார் யாக்கோபு நாடார், சாமிக்கண் நாடார், நல்ல பிள்ளை நாடார் - அமிர்தம் அம்மாள் தம்பதியர் ஆகியோர் சிறப்பாக செயல்பட்டார்கள். புதிய தேவாலயப் பிரதிஷ்டை நெல்லை பேராயர் மகாகனம் சா. தானியேல் ஆபிரகாம் அவர்களால் தூய. தோமா ஆலயம் என்ற பெயரில் 02. 01. 1977 அன்று பிரதிஷ்டை செய்யப்பட்டது.

வளர்ந்து வந்த மேல உப்பூரணி டயோசிசன் CSI சபை மக்கள் அமர்ந்து ஆராதிக்க 1977 இல் பிரதிஷ்டை செய்யப்பட்ட தூய. தோமா ஆலயம் போதுமானதாக இல்லாததால் பழைய தேவாலயத்தை முழுமையாக அப்புறப்படுத்தி அதே இடத்தில் புதிய தேவாலயமும் கோபுரமும் கட்ட 2011 இல் கரிசல் சேகர தலைவர் அருள்திரு. அருள் வேதநாயகம் ஐயரவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. புதிய தேவாலயம் மற்றும் புதிய கோபுரக் கட்டுமான பணிகள் 90 சதவீதத்திற்கும் மேல் நிறைவடைந்துள்ளது. பிரதிஷ்டைக்கு ஆயத்தமாக உள்ளது. மேல உப்பூரணி சபை ஊழியராக திரு. பேதுரு அவர்களும் மேல உப்பூரணியை உள்ளடக்கிய கரிசல் சேகர தலைவர் ஆக அருள்திரு. ஆரோன் துரைராஜ் ஐயரவர்களும் சபை பொறுப்பாளராக திரு. சு. சிவலிங்கம் ஜெபராஜ் அவர்களும் சிறப்பாகப் பணி செய்து வருகிறார்கள். மேல உப்பூரணி டயோசிசன் CSI திருச்சபையில் 40 குடும்பத்தினர் உள்ளனர்.

**ஆண்டறிக்கைப்படி மேல உப்பூரணி திருச்சபை**

திருநெல்வேலி டயோசிசன் 1930 ஆம் ஆண்டு வருமான சுருக்கக் கணக்கு ஆண்டறிக்கையில் இடையன்குளத்தை தலைமை இடமாகக் கொண்ட செவல் சர்க்கிளுக்கு உட்பட்ட சபைகள் பட்டியலில் கரிசல்பட்டி, புலவன் குடியிருப்பு ஓடைக்கரை மேல உப்பூரணி சபைகள் இடம் பெறவில்லை. இக்கிராமங்களில் சபையார் அனைவரும் சுத்தாங்க சுவிசேஷ திருச்சபையில் அக்காலத்தில் சேர்ந்திருந்தனர்.

திருநெல்வேலி திருமண்டல 1933 ஆம் ஆண்டு ஆண்டறிக்கையில் மேல உப்பூரணி சபை இடம் பெறவில்லை ஆனால் அதற்கு மிக அருகில் உள்ள கீழ உப்பூரணி மற்றும் வயல் நம்பிகுளம் இடம் பெற்றுள்ளது.

1943 ஆம் ஆண்டு ஆண்டறிக்கைப்படி மேல உப்பூரணி திருச்சபையில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் 59 பேர். பரி. நற்கருணைக்காரர்கள் 17 பேர். 1943 க்கும் 1947 க்கும் இடையே மேல உப்பூரணியில் பின்மாற்றம் ஏற்பட்டுள்ளது.

1947-48 ஆம் ஆண்டு திருநெல்வேலி திருமண்டல ஆண்டறிக்கைப்படி மேல உப்பூரணி திருச்சபையில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் 20 பேர். பரி. நற்கருணைக்காரர்கள் 13 பேர்.

1956-57ஆம் ஆண்டு திருநெல்வேலி திருமண்டல ஆண்டறிக்கைப்படி மேல உப்பூரணி திருச்சபையில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் 28 பேர். பரி. நற்கருணைக்காரர்கள் 14 பேர்.

1962 - 1963 ஆம் ஆண்டு திருநெல்வேலி திருமண்டல ஆண்டறிக்கைப்படி 1963 இல் மேல உப்பூரணி திருச்சபையில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் 27 பேர். பரி. நற்கருணைக்காரர்கள் 17 பேர்.

1970 - 1971 ஆம் ஆண்டு திருநெல்வேலி திருமண்டல ஆண்டறிக்கைப்படி 1971 இல் மேல உப்பூரணி திருச்சபையில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் 28 பேர். பரி. நற்கருணைக்காரர்கள் 13 பேர்.

1933 முதல் சுமார் 50 ஆண்டுகளாக சில குடும்பத்தார் மட்டுமே CSI டயோசிசன் திருச்சபையில் இருந்து வந்தார்கள். 1980 க்குப் பின்னர் இந்த நிலை மாறியது. இந்துக்களில் இருந்தும் CMS சுத்தாங்க சுவிசேஷ திருச்சபையில் இருந்தும் CSI டயோசிசன் திருச்சபையில் அநேக குடும்பத்தினர் சேர ஆரம்பித்தார்கள்.


2002-2003ஆம் ஆண்டு திருநெல்வேலி திருமண்டல ஆண்டறிக்கைப்படி 2002-2003 இல் மேல உப்பூரணி திருச்சபையில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் 59 பேர். பரி. நற்கருணைக்காரர்கள் 51 பேர்.

**மேல உப்பூரணியில் பெந்தேகோஸ்தே திருச்சபை**

கடந்த பல ஆண்டுகளாக மேல உப்பூரணியில் பெந்தகோஸ்தே சபைக்கு சென்று வருகிற குடும்பத்தார் உள்ளனர். புலவன் குடியிருப்பில் சுவிசேஷ பெந்தேகோஸ்தே எழுப்புதல் திருச்சபை உள்ளது. அதன் சபை மேல உப்பூரணியிலும் உள்ளது. இந்த சபைக்கு ஆறு குடும்பத்தினர் சென்று வருகின்றனர்.

**தற்போதைய மேல உப்பூரணி கிராமம்**

சுமார் 250க்கும் மேற்பட்ட குடும்பங்களைக் கொண்ட மேல உப்பூரணி கிராமத்தில் சுமார் 156 குடும்பத்தினர் கிறிஸ்தவர்களாக உள்ளது சமீப காலத்தில் அனேக குடும்பத்தார் கிறிஸ்தவத்தை ஏற்றுள்ளனர்.




Thirumaraiyur holds a significant place in the Diocese of CSI Thoothukudi-Nazareth. In 1900, Rev. Arthur Margoschis established a seminary to train native catechists for ordained ministry. Rev. C.W. Weston enhanced its status by ordaining theologically trained ministers in the Transfiguration Chapel at Luke's Hospital Nazareth campus. Later, Rev. Stephen Neil took over and relocated the seminary to the outskirts of Nazareth, acquiring 30 acres of land. He built a chapel, bungalows for the principal and staff, and housing for teachers and students, naming it Bishop Theological College.

To avoid confusion with a similarly named institution in Calcutta, it was renamed Tirunelveli Theological College and then Tamilnadu Theological College. Following the formation of the Church of South India and subsequent denominational mergers, the college moved to Arasaradi, Madurai, becoming Tamilnadu Theological Seminary (TTS).

TTS is dedicated to training servants of God with Christ-centered theology and experimental praxis, aiming for the glory of God and the expansion of His kingdom.

To honor the life, mission, and ministry of the people associated with this great organization as founders, principals, staff, and students, we are documenting their service. If any of your family members are associated with this, please email us their life story and service, along with photos.

Rev. John Samuel H.
nazarethsam@gmail.com
9488400874

வரலாற்று நாவல்

# புரட்சிப்புயல் ஏமிகார்மைக்கேல்

நெடுந்தொடர் - 26




முனைவர்.ஜான்சி பால்ராஜ்
நாவலாசிரியர், திருநெல்வேலி
+91 73971 56808


‘என்னாச்சு வேலம்மா இன்னைக்கு ரொம்ப கவலையா இருக்க மாதிரி தெரியுதே. . . கஞ்சி குடிச்சியா, இல்லையா?’என்றாள் செல்வி. ‘இல்லக்கா. . இனிமேல் தான்’. என்றாள் வேலம்மாள்.

‘நேரம் உச்சிக்கி வருது, மத்தியானம் கஞ்சிக்கு நேரமாயிரிச்சே... ஏன்!?’ என்ற அவளது கரிசனை, புண்களில் வருடிய மயிலிறகாய் இருந்தது. 'ஒன்னுமில்லக்கா' என்றாலும் வார்த்தையில் சோகம்! ‘இந்த ஊர்லயே எங்கிட்ட அன்பா பேசுறது நீங்க மட்டும்தானக்கா. எந்த பொம்பளையும் என்னை எட்டிகூட பார்க்கிறதில்ல. ஏதோ நான் அவங்களுக்கு துரோகம் செய்திட்டிருக்க மாதிரி பார்க்காவ. எனக்கு சத்தியமா உயிரோடிருக்கவே பிடிக்கலக்கா. ஆனா என்மேல உங்களுக்கு ஏன் இந்தப் பாசமுன்னு எனக்குத் தெரியல. அந்த ஆத்தாக்கிட்ட நான் உங்களுக்காவ



மட்டுந்தான் வேண்டிக்கிறேன்’ என்றவள் கண்கலங்கினாள்.

செல்வி, தினமும் காலையும் மாலையும் அந்த அம்மன் கோவிலருகில் இருந்த கிணற்றுக்குத் தண்ணீர் எடுக்க வருவாள். வேலம்மாளைப் பார்த்துப் பேசாமல் செல்ல மாட்டாள். செல்வியின் வருகைக்காக வேலம்மாளும் ஒரு குடத்தைத் தூக்கிக் கொண்டு அதேநேரம் அங்கு வருவாள். பெரும்பாலான நாட்கள் செல்வி வீட்டு கஞ்சியும் கூட்டும்தான் வேலம்மாள் வயிற்றுக்கு உணவு. செல்வி இந்த ஊருக்குத் திருமணமாகி வந்து இரண்டு வருடமாகிறது. வேலம்மாளோடு இந்த ஒருவருடமாக பேசும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டாள். செல்வி வந்த பிறகு வேலம்மாள் வீடுவீடாகச் சென்று பிச்சைக் கேட்கச் செல்ல வேண்டிய அவசியம் குறைந்தது.

‘அக்கா. . . என்னமோ நெனைச்சிட்டு இருக்கியன்னு எனக்கு புரியுது. என்னன்னுதான் தெரியல. . !’ என்றபடி செல்வியின் கண்களையே பார்த்தாள் வேலம்மாள். செல்வி, நீண்ட பெருமூச்சி ஒன்றை விட்டபடி 'வேலம்மா உன்னை பார்க்கும்போதெல்லாம் எனக்கு என் சின்ன வயசுல நடந்த ஒரு விசயம்தான் நெனப்புக்குவரும்’ என்றாள்.

‘அது என்னது அக்கா சொல்லுங்களேன் எங்கிட்ட.’ 'அது ஒன்னுமில்லம்மா. . . , உன்னை மாதிரியே ஒரு கோயில் பொண்ணு ஒருத்தி, எங்க ஊருகிட்ட இருந்த கோயில்லயிருந்து தப்பிச்சி எங்க வூட்டுக்கு வந்துட்டா!’. என்றாள் செல்வி.

‘என்னது தப்பிச்சா. . ?!’ என்றவள் வாய்பிளந்து நின்றாள். ‘ஆமா. . . அவளுக்கு அப்போது ஒரு பத்து வயசுதான் இருக்குமுன்னு எங்கம்மா சொல்லுச்சு, அவ பேரு லெச்சுமி. 'பெறவு . . . !?’ என்றாள் விழித்தபடியே வேலம்மா.

‘அவளுக்கு அங்கிருக்க பிடிக்கல. அவள் அதுக்கு முன்னமே ஒரு தடவை அந்த கோயிலிலிருந்து தப்பிச்சி தூத்துக்குடிக்கே ஓடிப்போய்ட்டா. அது அவள் சொந்த ஊரு. ஆனா அந்த கோயில்காரங்க விடல. தொறத்திட்டு போய், இழுத்திட்டு வந்து, அவகால்ல சூடுவச்சிருக்காவ. எங்ககிட்ட அதெல்லாம்

காட்டினா அந்தப் பொண்ணு. அங்க நடந்த கொடுமையை எல்லாத்தையும் எங்கம்மாகிட்ட சொல்லி ரொம்ப அழுதா. அப்போ எனக்கு அதெல்லாம ஒன்னும் புரியலமா' என்றபடி வேலம்மாளைப் பார்க்கமுடியாமல் கோவிலையே பார்த்துப் பேசினாள் செல்வி.

'வேலம்மாளின் கண்களிலிருந்து தாரை தாரையாய்க் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. . . . அவளது. . 'க்ம்ம. . . கும். . ' என்று விம்மும் சத்தம் கேட்டுத் திரும்பினாள் செல்வி.

'வேலம்மா. . . அழாத. . 'என்றாள் அவள் தோளில் கைவைத்தபடி. 'அது சரி தாயி, ரொம்பநாளா உங்கிட்ட ஒரு விசயம் கேக்கணுமுன்னு நெனைப்பேன். ஆனா நீ கவலைப்படுவியோன்னுதான் கேக்க மாட்டேன். உங்க அம்மா எதுக்கு உன்னவிட்டுட்டு செத்துபோயிட்டா.? அவளாவது உனக்காவ உசுரோடு இருந்திருக்கணும். என்ன வேதனைனாலும் தாங்கியிருந்திருக்கணும்' என்றாள் சற்று கோபம் கலந்த குரலில் செல்வி.

வேலம்மாளின் அழுகை அதிகரித்தது. 'சரி, சரி தாயி, உன்னை நான் வேதனைப் படுத்திட்டேன். . . நான் ஒன்னும் இனி கேக்கமாட்டேன். நான் போறேன் நீ அழாதே' என்று எழுந்தாள் செல்வி. 'இருக்கா இங்க கொஞ்சநேரம். போயிராத' என்று அவள் கையைப் பிடித்தாள் வேலம்மாள். 'எனக்கு மனசு ரொம்ப ஒடஞ்சிட்டு. என் மனசுல இருக்கத உங்கிட்ட சொல்லிருதேன்' என்றவள் வடிந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டு , 'அக்கா. . . எனக்கும் பத்துவயசுல தான் பொட்டுக் கட்டுனாவ. ' என்றதும் செல்வி, 'அதுசிரிமா . . . அந்த பொட்டுக்கட்டுங்கிறது எப்படி நடக்கும். கல்யாணம் மாதிரி நடக்குமாமே?' லேசான புன் முருவலோடு கேட்டாள் செல்வி.

'ஆமா. . ஆமா. . 'என்றாள் சலிப்போடு வேலம்மாள். சட்டென்று அவள்முகம் விரக்தியில் கடுமையானதை செல்வி கவனித்தாள்.

'என்ன வேலம்மா. . . ஏன் ஒருமாதிரி ஆயிட்டா நீ?' 'ம். . . . . ஆமா. . . என்னத்த சொல்ல அந்தக் கொடுமைய. . . . நெனைச்சாலே நெஞ்சு அடைக்குது' என்ற வேலம்மாள் சில வினாடிகளுக்குப்பிறகு பேசத் தொடங்கினாள்.

'அன்னைக்கு நம்ம ஊருல எந்த கல்யாணப் பொண்ணையும் அப்படி சோடிச்சிறுக்க மாட்டாவ. அந்த அளவு மாலையாலும் பூவாலும் என்னை பொதிஞ்ச மாதிரி புதுப் பொடவை உடுத்தி மேளதாளத்தோட கோயிலுக்கு அழைச்சிட்டுப் போனாவ. எல்லோரும் என்னை கையெடுத்துக் கும்பிட்டாவ. நானும் கும்பிட்டபடியே நடந்து போனேன். ஊரே என் பின்னால திரண்டு வந்துச்சு. எனக்கு மனசுக்குள்ள சந்தோசமாதான் இருந்துச்சு. ஆனா என் அம்மா மொகத்துல மட்டும் சந்தோசமே இல்ல. எனக்கு அந்த ஒண்ணுமட்டும் கவலையா இருந்துச்சு. இங்கயே அவள் கண்ணெதிரிலேயே தானே இருக்க போறன். பெறவு எதுக்கு இவள் இப்படி சோகமூஞ்சோடு இருக்கா, என்னைவேற ஊருக்கு கெட்டி குடுத்தாகூட. . . இந்த அளவு கவலைப்படதுல ஞாயமிருக்கு' என்று நான் நினைச்சிக்கிட்டே தான் இருந்தேன்.

'சரி, வேலம்மா. . . பெறவு என்னாச்சுன்னு சொல்லு' என்றாள் கதை கேட்கும் பாவனையில் செல்வி.

'என்னை கோயிலுக்கு அழைச்சிட்டு போயி, அங்க மாரியத்தமா முன்னால நிறுத்தினாவ. அங்க ஒரு பெரிய தட்டில பூ மாலை இருந்துச்சு. அதுக்கு கீழ ஒரு மஞ்ச துண்டு கட்டிவச்ச தாலிக்கயிறும் இருந்துச்சு. அதை அந்த பூசாரி எடுத்து, சாமி முன்னால வச்சி கும்பிட்டுட்டு, என் கழுத்தில கட்டினாவ. . . என்ற வேலம்மா வேறெதையும் சொல்லாமல் தன்னையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த செலவியைப் பார்க்க முடியாமல் வேறெங்கோபார்வையை செலுத்தினாள்.

'சரி , பெறவு உங்க அம்மாவ பார்த்தியா, வந்தவளா அங்க? 'இல்ல. . . எங்க அப்பா செத்துட்ட பிறகு எங்கம்மா இப்படி எந்த விசயத்துக்கும் போவக்கூடாதுல்லக்கா. . . அதனால வரல. வீட்டுலேயே இருந்திருக்கு. ' 'சரி பெறவு என்ன நடந்துச்சு. . ?'

'பெறவு அதோடு எல்லாம் முடிஞ்சதா நெனச்சேன். வாழ்கை முழுசும் அம்மனுக்கு வேலைக்காரியா இந்தக் கோயிலில் இருந்துட்டு என் அம்மாவையும் பார்த்துகிட்டே இருந்திரலாமுன்னு நெனைச்சேன். ஆனா, இரவில் ஊர் அடங்கின பெறவு, ஒருத்தன் இங்க வந்து நின்னான்' என்றவள். . . நிறுத்தினாள். துக்கம் தொண்டையை அடைக்க குரல் பம்மியது.

'அவன் என்னை இப்ப நான் தங்கியிருக்க அந்த வீட்டுக்குள்ள கூட்டிட்டுப்போனான். இனி நான் தான் உனக்கு முதல்புருசன்னு சொன்னான். நான் ஆச்சரியமா அவனையே பார்த்தேன். கையில் எனக்கு திங்கிறதுக்கு இனிப்பும் இடிச்ச பச்சைமாவு உருண்டைகளும் கொண்டு வந்திருந்தான். ஒரு வாளையிலையில் மரிக்கொழுந்தும், மல்லிகைப்பூவும் சுருட்டி வச்சிருந்தான். காலையல வச்சப் பூவை எடுத்துட்டு இதை வைக்கசொன்னான். பெறவு, சாப்பிட சொன்னான். நான் பசியோடு இருந்ததால அவன் தந்த சாப்பாட்டை ஆசையா சாப்பிட்டேன். பூவையும், பொட்டையும் வச்சிக்கிட்டேன். அதுக்குப்பெறவு என்னை அவன். . . ' என்ற அவள் செல்வியைப் பார்த்தாள். கண்கள் குளமாகி படபடத்து கண்ணீர் அருவியாய் ஓடியது. . .

'புரியுது வேலம்மா. அழாதே. . . உன்னோட அவன் ஒறவு வச்சிருப்பான். அதுக்குதானே இதெல்லாம். . எனக்குத்தெரியும்' என்றாள் எரிச்சல் கலந்த குரலில்.

'ஆமாக்கா, ஆனா அவன் சின்ன கத்தி ஒன்னும் மறைச்சி வச்சிருந்திருக்கான் அக்கா'என்றவள் அடக்க முடியாமல் பற்களைக் கடித்து உதடுகள் விரிய வானத்தை அன்னாந்து பார்த்தபடியிருந்தாள். வேதனையால் அவள் நெற்றிச் சுருங்கியது. நாசி துவாரங்கள் விம்மி புடைக்கக் கண்ணீர் சாரை சாரையாய் வடிந்தது.

'கத்தியா. . . . ! ? எதுக்குமா' என்றாள் செல்வி. 'அந்த தேவடியா பயல் என் மூத்திர வாசல அந்தக் கத்தியால கிழித்து விட்டு இரத்தம் சொட்ட சொட்ட என்னோடு ஒறவு வச்சான்க்கா'என்றவள் ஏங்கி ஏங்கி அழுதாள். அவளது எலும்புகள் தள்ளிய மார்புக்கூடு வேதனையால் ஏறி இரங்கி விக்கித்துத் தவித்தது. செல்வியும் அழுகையை அடக்கமுடியாமல் தன் கண்ணீரைத் துடைத்தபடி 'அழாத வேலம்மா. . . 'என்றாள்.

'அக்கா. . . அந்தக் கத்தி தான் என் அம்மாவின் உசுரையும் அறுத்துட்டு போயிட்டு' 'என்ன சொல்லுதா வேலம்மா, தற்கொலை பண்ணிட்டான்னுல்லா ஊரல எல்லாரும் சொன்னாவ. !?'

'ஆமா. . . அடுத்த நாள் காலையில, எங்கம்மா இதே கிணத்தண்டைக்கு என்னைத் தேடிட்டு வந்தா. அவள் மொகமெல்லாம் அழுது வீங்கி போயிருந்துச்சி. நான் அந்த கல்லுல சாஞ்சி இருந்தேன். . ' என்று கோயிலுக்கு பின்புறமிருந்த பெரிய கல்லை காட்டினாள்.

'என் அம்மா என்னைப் பார்த்துட்டு, ஓடி வந்து என்னை கட்டிப்பிடிச்சு அழுதுகிட்டே என் மொகத்துல முத்தம் வச்சா. நானும் அழுதுட்டே ராத்திரி நடந்த எல்லாத்தையும் சொல்லி சொல்லி சொல்லி அழுதேன். நான் அவன் கத்தியால கிழிச்சான்னு சொன்னதும் என் அம்மா தாங்க முடியாம தலையில அடிச்சி அடிச்சி அழுதா. . . . கடவுளே நீ இருக்கியான்னு கேட்டு மண்ணள்ளி எறிஞ்சா. '



'கடைசியா நான் அம்மா, இன்னைக்கும் அவன் வருவானோன்னு பயந்திட்டே கேட்டேன். . . 'என் அம்மா ஒன்னும் சொல்லாம என்னைப்பார்த்தபடி அழுதுகிட்டே இருந்தா. பிறகு கொஞ்ச நேரம் கழிச்சி . . . 'இல்ல. . இன்னைக்கு வரமாட்டான் எவனும். . . . என்று ரொம்ப உறுதியா சொன்னா, எனக்கு கொஞ்சம் நிம்மதியா இருந்துச்சி.

'சரி நீ போய் படுத்துக்க, நான் இப்ப வாரேன்னு' சொல்லிட்டு வீட்டுக்குப் போயி எனக்கு குடிக்கிறதுக்கு கஞ்சி காய்ச்சி எடுத்துட்டுவந்தா. நான் படுத்தே இருந்தேன். . . பிறகு சாயங்காலம் வரை இந்தக் கிணத்துக்கு தண்ணீர் எடுக்க வரமாதிரி ஓயாமல் இந்தப் பக்கமா அவள் நடமாடியதைப் பார்த்தேன்.

சாயங்காலமா வந்து என்னைப் பார்த்துப் பேசிட்டு கடைசியா காலையில அழுதமாதிரியே அழுதுகிட்டே போனா. கருக்கல் விடல, ஊருக்குள்ள ஒரே சத்தம். வள்ளி தூக்குல தொங்கிட்டான்னு ஒருத்தன் கத்திக்கிட்டே இந்த வழியே ஓடினான். நான் அதைக் கேட்டதும் மயக்கமெடுத்து விழுந்திருக்கேன். எனக்கு கத்திக்காயம் ஆறட்டுமுன்னு அவள் செத்துட்டாக்கா. எழவு விழுந்தா அன்னைக்கு கோயில்ல வெளக்கு வைக்க பூசாரிகூட வரமாட்டான் பாரு. . .

அதனாலதான். அதை என் அம்மா நல்லா தெரிஞ்சி வச்சிருந்திருக்கா. . . . செல்வி துக்கம் தாளாமல் சேலை முந்தாணையால் வாயைப் பொத்தியபடி அழுதாள்.

'வேலம்மா. . . இதெல்லாம் தானே அன்னைக்கு நான் சொன்ன அந்த லெச்சுமிக்கும் நடந்திருக்கும்? அவளுக்கும் அப்போது பத்து வயசுதான் இருக்கும். அவள் எங்க ஊட்டுக்கு வந்த அந்த ராத்திரி எங்க அம்மாகிட்ட என்வெல்லாமோ சொல்லி சொல்லி அழுதுகிட்டிருந்தா, அதுசரி வேலம்மா, அன்னைக்கு வந்தவன் அந்தப் பூசாரியாதானே இருக்கனும்?'என்றவள் வேலம்மளை ஏறிட்டுப் பார்த்தாள்.

'இல்லக்கா. . . ' என்றாள் வேலம்மாள். 'அப்போ வேற அது யாரு, நம்ம ஊர் காரனா இல்லையா?' என்றாள் செல்வி. 'இல்லக்கா அந்தாளு யாருன்னு சொல்லவிரும்பல. . . . ' என்றாள்.

'ஏன், நான் யார்கிட்டையும் சொல்லிருவேன்னு நெனைக்கியா? சொல்லமாட்டேன். . . சும்மா சொல்லு அந்த நாராதிபயல் யாருன்னு தெரிஞ்சிகிடதான்' என்ற செல்வியின் வார்த்தையில் உறுதி இருந்தது.

'ஆனா. . . எந்த நெலமையிலும் யார்கிட்டேயும் சொல்லிற கூடாதுக்கா சரியா.' 'சொல்லமாட்டேன் நீ சொல்லு. ' என்றாள். 'உங்க பெரிய மாமனாருதான்க்கா . . . . கண்ணப்பன்!' என்றபடி வேலம்மாள் குனிந்து கொண்டாள். 'என்னது. . . . . நெசமாவா வேலம்மா?' 'ஆமாக்கா, நான் இப்படி ஆவதுக்கு முழுக் காரணமே அவிய தான். . 'என்றாள்.

செல்வி அவளை ஆறுதல் படுத்தியபடி எழுந்தாள். . . அவள் முகத்தில் கோபத்தின் கோடுகளும், வெறுப்பின் உச்சமும் தெரிந்தது. 'வேலம்மா நீ இங்க இருக்க வேண்டியவளில்ல. . . என் லெச்சிமியைப் போல நீயும் சுதந்திரமா இருக்கப்போறா. . . உன் அம்மா உயிர்த்து வேறொரு வடிவத்தில அங்க இருக்காவ. . . அவியள நீ சீக்கிரமா பாக்க போறா வேலம்மா. எனக்கு பதில் கடவுள் உனக்கு என் லெச்சுமிய அக்காவா உனக்கு தருவார் . . . . கவலை படாதே' என்றாள். 'என்னக்கா சொல்லுதிய. . எனக்கு அம்மாவா. . . என்ற வேலம்மாள் கலங்கி கோபத்தில் சிவந்திருந்த செல்வியின் கண்களை உற்றுப் பார்த்து அதிர்ந்தாள்.

'ஆமா. . . வேலம்மா, நான் சொல்லுதபடி நீ செய்தா போதும். நாளைக்கு வெள்ளனை நாலுமணிக்கு இங்க வந்திரு, நானும் வாரேன். . !' என்றவள் நடந்தாள். . . தனது லெட்சுமிக்கு ஒரு புதுத் தோழி வேலம்மாள் கிடைக்கப் போகிறாள் என்ற உறுதியோடு. . !!

**தொடரும்....**

# வரலாற்று புத்தக வெளியீடு

'சேலத்திற்கு கிறிஸ்தவம் வந்தது' என்ற சேலம் கிறிஸ்தவ வரலாற்றுச் நூல் கடந்த 15-6-2024 சனிக்கிழமை காலை 10-00 மணியளவில் சேலம் அஸ்தம்பட்டி CSI இம்மானுவேல் சமுதாயக்கூடத்தில் (CSI இம்மானுவேல் ஆலயம் எதிரில்) நடைபெற்ற புத்தக வெளியீட்டு விழாவில் வெளியிடப்பட்டது. நூலாசிரியர் திரு. ஜே. பர்னபாஸ் அவர்களின் தந்தை திரு. I. ஜேம்ஸ் ரத்தினம் (1933-2024) அவர்களின் 40ஆம் நாள் துக்கநிவர்த்தி நினைவேந்தல் கூட்டத்தோடு இந்த புத்தக வெளியீட்டு விழாவும் இணைத்தே நடத்தப்பட்டது. இந்த புத்தக வெளியீட்டு விழாவிற்கு சேலம் வரலாற்றுச் சங்கத் தலைவர் திரு. இம்மானுவேல் J. ஜெயசிங் அவர்கள் தலைமை தாங்கினார். புத்தக வெளியீட்டு விழாவிற்கு வருகை தந்திருந்த அனைவரையும் சேலம் வரலாற்றுச் சங்கத்தின் சார்பாக சங்கத்தின் செயல் தலைவர் திரு. தாரை A. குமரவேலு வரவேற்றார்.

சேலம் வரலாற்றுச் சங்க வெளியீடாக வெளியிடப்பட்ட இந்த நூலை தென்னிந்திய திருச்சபை கோவைத் திருமண்டல மேனாள் ஆயர் அருள்திரு. பிலிப் K. மல்லி அவர்கள் வெளியிட முதல் பிரதியை சேலத்தில் சிறந்த ஆங்கில மருத்துவர் டாக்டர் C. T. கிருபா, M. S., அவர்கள் பெற்றுக் கொண்டார். இரண்டாவது பிரதியை சேலம் அஸ்தம்பட்டி CSI இம்மானுவேல் ஆலய ஆயர் மற்றும் தலைவர் அருள்திரு. A. M. பிரெட்ரிக் தானுப்பிள்ளை அவர்களும், மூன்றாம் பிரதியை சேலம் கோட்டை CSI லெக்லர் நினைவாலயத்தின் ஆயர் மற்றும் தலைவர் அருள்திரு. எழில் இராபர்ட் கெவின் அவர்களும், நான்காம் பிரதியை சேலம் கோட்டை CSI கிறிஸ்துநாதர் ஆலயத்தின் ஆயர் மற்றும் தலைவர் அருள்திரு. ஜவகர் வில்சன் ஆசீர் அவர்களும், ஐந்தாம் பிரதியை சேலம் அஸ்தம்பட்டி CSI இம்மானுவேல் ஆலய திருமண்டல பேரவை உறுப்பினர் திரு. A. சேகர் ஜெபசிங், அவர்களும் பெற்றுக் கொண்டனர்.

நூலை வெளியிட்டு சிறப்புரை ஆற்றிய மேனாள் ஆயர் அருள்திரு. பிலிப் K. மல்லி அவர்கள் பேசும்போது 'சேலத்திற்கு கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிக்க வந்த கிறிஸ்தவத் திருத் தொண்டர்களின் சேவைப் பணிகள், தியாகங்கள், ஆகியவற்றை இந்த நூலின் பக்கங்களில் நூலாசிரியர் திரு. J. பர்னபாஸ் அவர்கள் என்றும் நிலைத்திருக்கும்படி பதித்து வைத்திருக்கிறார். அவற்றில் திருத்தொண்டர் அல்லாத ஒருவர் இங்கே நினைக்கப்பட வேண்டியவர் அவர்தான் அன்றைய நாளில் சேலம் மாவட்டத்தின் பிரிட்டீஷ் கலெக்டராக இருந்த திரு. மாண்டேகு டுண்டாஸ் கோபர்ன் என்பவர். அவரது முயற்சியால்தான் சேலம் மாவட்டத்தில் சீர்திருத்த கிறிஸ்தவத்தின் சேலம் பணித்தளம் முதன்முதலாக உருவாக்கம் கண்டது. அது கோவைப் பகுதிகளுக்கும் முன்பாகவே சுதேச மக்களுக்கான இறையழைப்பின் வாசலாக சேலம் பகுதிகளில் திகழ்ந்தது. அவரது முயற்சிகளின் பயனால் சேலம் மாவட்டத்தில் கல்விக்கூடங்கள் சிறப்பாக செயல்படத் தொடங்கியது.' என்று அவர் எடுத்துரைத்தார். அவரைத் தொடர்ந்து வாழ்த்துரை வழங்கிய மகேந்திரா கல்விநிறுவனங்களின் செயல் இயக்குநர் டாக்டர் சாம்சன் இரவிந்திரன் அவர்கள் பேசும்போது' வரலாறு என்பது ஒரு சமுதாயத்தின் பாரமாக இல்லாமல், அது பயணிக்கும் பாதையைக் காட்டும் ஒரு வழிகாட்டியாகத் திகழ்கிறது. அந்த வகையில் இந்த புத்தகம் வரலாற்றின் பாரமான யாவற்றையும் விலக்கி நாம் பயணிக்கும் பாதையை துலக்கிக்காட்டும் ஒளிவிளக்காக திகழ்கிறது என்றார்.



இவரைத் தொடர்ந்து வாழ்த்துரை வழங்கிய கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தின் நிர்வாகி திரு. மன்னா செல்வகுமார் (திருநெல்வேலி ) பேசும்போது : 'பல ஆண்டுகளின் உழைப்பும் தேடலும் இந்த புத்தகத்தில் அடங்கியிருக்கிறது. 2020 ஆம் ஆண்டு ஜீன் மாதம் துவக்கம் கண்ட 'கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்' மாத இதழில் வெளிவந்த 49 கட்டுரைகளின் ஒரு தொகுப்பே இந்த புத்தகம்' என்றும் அவர் கூறினார். தொடர்ந்து அருளமுது இதழின் ஆசிரியர் திரு. சந்திரா மனோகரன், திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தின் திரு. ஆல்வின் ஜேக்கப் ஆகியோர் வாழ்த்திப் பேசினர். இறுதியாக நன்றியுரை மற்றும் ஏற்புரை நூலாசிரியரும் சேலம் வரலாற்றுச் சங்கத்தின் பொதுச் செயலாளருமான திரு. ஜே. பர்னபாஸ் வழங்க 'சேலத்திற்கு கிறிஸ்தவம் வந்தது' என்ற சேலம் கிறிஸ்தவ வரலாற்று நூல் வெளியீட்டு விழா சிறப்பாக நிறைவு பெற்றது.

நூலின் முதல்பிரதியைப் பெற்ற சேலத்தில் சிறந்த மூத்த ஆங்கில மருத்துவர் டாக்டர் C.T.கிருபா அவர்களை சேலம் வரலாற்றுச் சங்கம் சார்பாக பொன்னாடை அணிவித்து மரியாதை செய்கிறார். சேலம் வரலாற்றுச் சங்கத்தின் செயல் தலைவர் திரு.தாரை A.குமரவேலு அவர்கள்.





ஜே. பர்னபாஸ் சேலம்
வரலாற்றுச் சங்கம்


கிறிஸ்தவ
# வரலாற்றுச் சுவடுகள்

மாத ஆய்விதழ் சந்தா விபரம்

| சந்தா விபரம் | உள்நாடு |
|---|---|
| தனிப்பிரதி | ₹ 60 + நன்கொடை |
| ஆண்டு சந்தா | ₹ 600 + நன்கொடை |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 3000 + நன்கொடை |

வங்கி விபரம்

Name: Christian Historical Society
A/c Number : 1748 020000 4906
Bank name : Federal Bank
IFSC code: FDRL0001748

"கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்"
மாத ஆய்விதழை நீங்கள்
தொடர்ந்து பெற்றுக் கொள்ள
G-Pay மூலம் நன்கொடை செலுத்த
91767 80001 என்ற எண்ணுக்கு செலுத்தவும்
காசோலை மற்றும் வரைவோலை செலுத்த
'கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்'
( Christian Historical Society )
என்ற பெயரில் எடுக்கவும்



ஆசிரியர்
கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,
கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,
பங்களாச் சுரண்டை-627859,
தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)
04633 290401, 91767 80001

christianhistoricalsociety.in
tchsportal.co.in
christianhistorical@gmail.com



# மேற்கு திருநெல்வேலியின் (நல்லூர்) தவச உற்சவ பண்டிகை

சுஜித் ரெக்ஸ்

பூர்வ தாய் திருச்சபையான நல்லூர் திருச்சபையின் தவச உற்சவ பண்டிகை என்று அழைக்கப்படும் ஸ்தோத்திர பண்டிகையின் வரலாற்றை காணும் முன்பு நம் பொதுவான தவச உற்சவ பண்டிகையின் வரலாற்றை சுருக்கமான காண்போம்.

### தவச உற்சவ பண்டிகையின் வரலாறு

1. 1891 இல் சாட்சியாபுரத்தில் முதல் தவச உற்சவ பண்டிகை துவக்கம்.
2. 1892 இல் நல்லூரில் தவச உற்சவ பண்டிகை துவக்கம்.
3. 1893 இல் மெய்ஞானபுரம் தவச உற்சவ பண்டிகை துவக்கம்.
4. 1894 இல் டோனாவூர், சுவிசேஷபுரம் தவச உற்சவ பண்டிகை துவக்கம்.
5. 1895 இல் பாளையங்கோட்டை தவச உற்சவ பண்டிகை துவக்கம்.
6. 1896 இல் பங்காளா சுரண்டை, பண்ணைவிளை தவச உற்சவ பண்டிகை துவக்கம்.
7. 1975 இல் சர்கிள் என்பது சேகரமாக இயங்கிய பின்பு எல்லா சேகரங்களிலும் படிப்படியாக தவச உற்சவ பண்டிகை துவங்கப்பட்டது.

### நல்லூரில் தவச உற்சவ பண்டிகையின் வரலாறு

பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கி. பி. 1820ம் ஆண்டு நெல்லை மேற்குப் பகுதிகளில் தேவதாசர்கள் வந்து வேதவசன விதைகளை விதைக்க அருட்திரு. பால் ஷாப்டர் அவர்கள், குருவன்கோட்டையை மையமாக வைத்து ஊழியம் செய்தார்கள். ஒரு திருச்சபையையும் உருவாக்கினார்கள். விபூதி சங்கத்தாரின் எதிர்ப்பால் நல்லூரை மையமாகக் கொண்டு அறுபது ஏக்கர் நிலம் வாங்கி திருச்சபையை உருவாக்கினார்கள். அந்நாட்களில் நல்லூரைச் சுற்றியுள்ள நாலாத்திசைகளிலும் சபைகள் உருவாக்கப்பட்டன.

திருநெல்வேலி திருமண்டல கதிட்ரல் பேராலயத்தில் சுமார் 243 ஆண்டுகளுக்கு முன் ஒவ்வொரு ஆண்டும் மூன்று நாட்கள் மாம்பழச் சங்க விழா நடைபெறும். இப்பொழுது அங்கு 244 வது மாம்பழச் சங்கம் கொண்டாடப்படுகிறது. அதுபோல முதல் முதலாக திருநெல்வேலி மேற்பகுதியில் நல்லூரை மையமாக வைத்து நாலாபுறத்திலுள்ள திருச்சபை மக்கள் வருடம் ஒரு முறை மூன்று நாட்கள் கூடி வந்து தேவன் அந்தந்த ஆண்டில் தந்த ஆசீர்வாதங்களை நினைத்து துதிக்கவும் ஸ்தோத்திரம் செலுத்தவும் நன்றி கூறவும், தங்களுடைய நேர்ச்சை காணிக்கைகள் மூலமாக ஸ்தோத்திரக் காணிக்கைகள் மூலமாக நிலத்தில் விளைந்த காய்கறிகள், நவதானியங்கள், பழவகைகள் ஆகியவற்றை கொடுத்து தேவனிடத்திலிருந்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வதற்காக 1892ல் அருட்திரு. ஜேம்ஸ் ஆசீர்வாதம் ஐயரவர்கள் காலத்தில் முதல் முதலாக தவச உற்சவ பண்டிகை நடைபெற்றது. அந்நாட்களில் சுமார் ஐம்பது மைல் தூரம் உள்ள சுற்று வட்டார மக்கள் ஆசரித்தார்கள். அது படிப்படியாக சர்க்கிளாகவும், கவுன்சிலாகவும், சேகரங்களாகவும் பிரிந்து, இப்போது 5 கிலோமீட்டர் சுற்றுவட்டார மக்கள் மட்டுமே பண்டிகையை ஆசரிக்க வருகிறார்கள்.

ஆனால் நல்லூர் சேகரம் நெல்லை மேல்பகுதியில் தாய்ச் சபையாக விளங்குவதால் பிற இடங்களிலிருந்தும், சேகரங்களிலுமிருந்தும், சபைகளிலுமிருந்தும், முக்கியமாக மதுரை, அம்பை, கல்லிடைக்குறிச்சி போன்ற இடங்களிலிருந்தெல்லாம் திருச்சபை மக்கள் வருவதால், கூட்டம்

கூட்டமாக திருச்சபை மக்கள் வந்து உற்சாகமாக பண்டிகையை கொண்டாடுகிறார்கள்.

கி. பி. 1991ம் ஆண்டு அருட்திரு. V. காந்தி செல்வின் ஐயரவர்கள் காலத்தில் நல்லூர் தவச உற்சவப் பண்டிகை நூற்றாண்டைக் கண்டது. 2016ல் அருட்திரு. A. B. ஜாண் கென்னடி ஐயரவர்கள் காலத்தில் நல்லூர் தவச உற்சவம் 125 -வது ஸ்தோத்திரப் பண்டிகையாக நடைபெற்றது.

நல்லூர் ஸ்தோத்திரப் பண்டிகை ஆரம்ப நாட்களில் நல்லூர் பரிசுத்த பவுலின் ஆலயத்தில் பந்தலிட்டு, மத்தியில் மேடை அமைத்து, மேடையைச் சுற்றி திருச்சபை மக்கள் இருக்க, மிஷனரிமார்கள் மேடையில் அமர்ந்து ஆராதனையை நடத்தியிருக்கிறார்கள். சுமார் 35 ஆண்டு காலமாக ஆலயத்தின் வடபுறம் ஸ்தோத்திரப் பண்டிகை நடைபெற்றது. கி. பி. 1929 முதல் ஆலயத்தின் முன்புறம் பந்தல் போட்டு ஸ்தோத்திரப் பண்டிகை இந்நாள்வரை நடைபெறுகிறது.

ஆரம்ப நாட்களில் மாட்டு வண்டிகளில் மக்கள் கூட்டம், கூட்டமாக குடும்பம் குடும்பமாக வருவார்கள். மூன்று நாட்கள் தங்கியிருந்து பண்டிகை கொண்டாடினார்கள். மிஷனரிகள் நாட்களில் தவச உற்சவப் பண்டிகை முதல் மணி அடித்தவுடன் சபையார் வீடுகளிலிருந்து புறப்பட்டு கைகளில் நேர்ச்சைப் பொருட்களுடன் வருவார்கள். பெண்கள், போர்டிங் பாடசாலைப் பிள்ளைகள் உற்சாகமாகப் பாடிக்கொண்டு தென்புறமாய் பந்தலுக்குள் வருவார்கள். ஆண்கள், போர்டிங் பாடசாலைப் பிள்ளைகள் அதே வேளையில் பாடிக்கொண்டு ஆலயத்தின் வலதுபுறமாக பந்தலுக்குள் வருவார்கள். ஆசிரமத்து ஊழியர்கள் தம்புரு அடித்து பாடிக்கொண்டு பந்தலின் மத்தியின் வழியாய் பந்தலுக்குள் வருவார்கள். இரண்டாம் மணி அடித்தவுடன் மேற்கே பங்களாவிலிருந்து குருக்கள், மிஷனரிகள், துரைமார்கள், துரைச்சானிகள் சின்னங்கள் அணிந்து சிலுவையைப் பிடித்துக் கொண்டு பாடி வருவார்கள். பந்தலுக்கு அருகே வந்ததும் நின்று விடுவார்கள்.

மூன்றாம் மணி அடித்தவுடன் பவனியாக பாடி பந்தலுக்குள் பிரவேசித்து மத்தியில் உள்ள மேடையில் வந்து அமருவார்கள். பார்ப்பதற்குக் கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

அன்றைய நாட்கள் சர்க்கிள்களாக நாலாதிசைகளிலிருந்து சுமார் 25 மைல் தொலைவிலிருந்து மக்கள் வந்தனர். இந்நாட்களில் சர்க்கிள் சேகரமாக மாறி ஐந்து கிலோமீட்டர் சுற்று வட்டாரத்துக்குள் மக்கள் இருப்பதாலும், மோட்டார் வாகனங்கள் பெருகி விட்டதாலும் அவ்வப்போது மூன்று நாட்களிலும் மக்கள் வாகனங்களில் வந்து விட்டு செல்கின்றனர். நல்லூர் சேகரம் நெல்லை மேற்குப் பகுதியில் தாய் சபையாக இருப்பதால் பண்டிகை ஆராதனையின் போது ஆலயத்தின் முன் வளாகப் பந்தலில் கூட்டம் இன்று வரை நிரம்பி வழிகிறது. தேவனுக்கே மகிமை உண்டாகட்டும், பண்டிகை நாட்களின் மூன்று நாட்களிலும் வெளியிலிருந்து வருகின்ற மக்கள் சேகர இல்லம், ஆசிரமம், கல்வி நிறுவனங்களில் தங்கியிருந்து ஆசரிக்கின்றனர். அனைத்து சபை மக்களும் தாய் சபை மக்களாக இன்று வரை T. D. T. A. பாடசாலை, ரேனியஸ் சபா மண்டபம் ஆகியவற்றில் தங்கியிருந்து தவச உற்சவப் பண்டிகையினை மகிழ்ச்சியோடு ஆராதிக்கின்றனர்.

காணிக்கைப் பொருட்கள் படைக்கும் போது பேராயர் அவர்கள் பந்தலின் மத்தியில் அமைந்திருக்கும் மேடையில் முன்நாட்களில் பேராயருக்குரிய நாற்காலி போடப்பட்டிருக்கும். அந்த ஆசனத்தில் அமர்ந்திருந்து திருச்சபை மக்கள் கொண்டு



வருகிற ஸ்தோத்திரக் காணிக்கைகள், நேர்ச்சைக் காணிக்கைகள், பொருள் காணிக்கைகள், கோழிகள், ஆடுகள், கன்றுக்குட்டிகளை ஆசீர்வதிப்பார்கள். இந்நாட்களில் பேராயர் அவர்கள் மேடையின் மத்தியில் படியில் நின்று கொண்டு திருச்சபை மக்கள் கொண்டு வருகின்ற காணிக்கைகளை ஆசீர்வதிக்கிறார்கள்.

காணிக்கைகள் படைக்கும்போது முதலாவது ஆண்கள் வரிசையாக வந்து பேராயர் முன்னிலையில் காணிக்கைகளைப் படைத்து ஆசீர்வாதம் பெற்றுச் செல்வார்கள். அது போன்றே பெண்களும் வரிசையாக வந்து பேராயர் முன்னிலையில் காணிக்கை படைத்து ஆசீர்வாதம் பெற்றுச் செல்வர். காணிக்கை படைக்கும் போது ஆண்களையும் பெண்களையும் வரிசைப்படுத்த மேல் நெல்லை மேல்நிலைப் பள்ளியின் சாரணர் இயக்கத்தைச் சார்ந்த மாணவர்களும் ஆசிரியர்களும் வந்து பிரதான பண்டிகை ஆராதனையின் போது ஒழுங்கை நிலை நாட்டுவர். அவர்களுடைய பணி பாராட்டுதற்குரியது.

தவச உற்சவப் பண்டிகையின் ஆராதனை ஒழுங்குகள் செம்மையான முறையில் கடைபிடிக்கப்படுகிறது. நல்லூர் நெல்லையின் மேற்பகுதியில் தாய்ச் சபையாக இருப்பதால் ஒவ்வொரு ஆண்டும் நெல்லைத் திருமண்டல பேராயர் அவர்களை அழைத்துத்தான் ஸ்தோத்திரப் பண்டிகை நடத்தப்படுகிறது.

முதல் நாள் மாலை சேகர ஆசிரியர்கள் சபையோர் ஆண்கள், பெண்கள், குழந்தைகள், வாலிப ஆண்கள், வாலிப பெண்கள் நல்லூர் சபைக்குள் தெருக்களில் பவனியாகப் பாட்டுப்பாடி வந்து ஆலயத்தின் முன் பிரதான வாசலருகே வெளிப்புறத்தில் போடப்பட்டிருக்கும் பந்தலின் ஆர்ச்சையொட்டி திருமண்டலக் கொடி ஏற்றப்படும். பின்பு இரவு ஆயத்த ஆராதனை நடைபெற்ற பிறகு ஏதாவது நிகழ்ச்சி நடைபெறும். இரண்டாம் நாள் காலை 5. 00 மணிக்கு அருணோதயப் பிரார்த்தனையும், காலை 9. 00 மணிக்கு பரிசுத்த ஞானஸ்நான ஆராதனையும் நடைபெறும். ஞானஸ்நான ஆராதனையின் போது சபையிலுள்ள சிறுகுழந்தைகளும், இயேசு கிறிஸ்துவை அறியாத பருவங்கடந்த ஆண்களும், பெண்களும் ஞானஸ்நானம் பெறுவார்கள்.

முன் நாட்களில் ஞானஸ்நான ஆராதனையின் போது பொன்னம்மாள் ஆசிரமத்தின் ஊழியர்கள் மூலம் அநேகர் பருவங்கடந்த ஞானஸ்நானம் பெறுவது நல்லூர் சுவிசேஷ ஊழியத்தின் சிறந்த எடுத்துக்காட்டு ஆகும்.

பிரதான பண்டிகைக்குப் பேராயர் வருகிற போது நல்லூர் எல்கையில் நிறுத்தி அங்கிருந்து மேல்நிலைப் பள்ளி இல்ல மாணவர்கள், சபையோர்கள், சேகர ஆசிரியர், ஆசிரியைகள் வரவேற்று பாடல் பாடி பவனியாக அழைத்து வருவது பண்டிகையின் கண்கொள்ளாக் காட்சியாகும். பிற்பகல் 1. 30 மணியளவில் பிரதான பண்டிகைக்கு இரண்டாம் மணி அடித்தவுடன் பாடகர் வரிசையினர், சபைமன்றக் குருக்கள், இறுதியாக பேராயர் ஆகியோர் ஆலயத்தின் கீழ் புறமுள்ள பிரதான வாயிலில் இருந்து பவனியாக வந்து பந்தல் மேடையில் அமர்வது ஆராதனையின் கண்கொள்ளாக் பாட்சியாகும். அன்று மாலை நான்கு மணிக்கு பெண்கள் கூட்டம் நடைபெறும். அன்று இரவு 7. 00 மணிக்கு இந்திய மிஷனரி சங்கம் சார்பில் பணித்தள நிகழ்ச்சி நடைபெறும். இரவு ஒன்பது மணிக்கு பஜனைப் பிரசங்கம் நடைபெறும்.

மூன்றாம் நாள் அதிகாலையில் 5 மணிக்கு லித்தானியா ஆராதனை நடைபெறும். பிற்பகல் 1. 30 மணிக்கு ட்டும் வருடாந்திரக் கூட்டம் நடைபெறும். வருடாந்திரக் கூட்டத்தில் நல்லூரில் உள்ள மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் தலைமை தாங்குவார்கள். வருடாந்திரக் கூட்டத்தில் சிறப்புச் சொற்பொழிவு ஆற்ற வெளியிடத்தில் இருந்து சிறந்த கிறிஸ்தவ சொற்பொழிவாளரை அழைப்பார்கள். வேதபாடத்தில் வெற்றி பெற்றவர்களுக்கும், மேல்நிலைப் பள்ளியில் 10 வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பில் முதல் இரண்டு மதிப்பெண்கள் எடுத்தவர்களுக்கும் C. S. I, ஜெயராஜ்- அன்னபாக்கியம் கல்லூரி முதல்வர் அவர்கள் மேடையிலிருந்து பரிசுகள் வழங்குவார்கள். விழா மேடையில் சேகர குருவானவர், மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர், கல்லூரி முதல்வர், சேகர செயலர், சேகர பொருளாளர், சொற்பொழிவாற்ற வந்திருப்பவர்கள் அமர்ந்திருப்பார்கள்.

வருடாந்திரக் கூட்டத்தில் சேகர வரவு செலவுகள் வளர்ச்சி பற்றி அறிக்கை வாசிக்கப்படும். மாலை 4. 00 மணிக்கு பாலர் வகுப்பு முதல் இரண்டாம் வகுப்பு முடிய பந்தலில் வாய்மொழியாக வேதவசனப் போட்டி நடைபெறும்.

இரவு 9. 00 மணி முதல் 12. 00 மணி முடிய நடக்கின்ற பஜனைப் பிரசங்கத்துடன் பண்டிகையானது வெகு கோலாகலத்துடன் முடிவடைகிறது.

அழகற்றவள் நான்

ஏமி கார்மைக்கல் அம்மாவின் தனிப் புகைப்படத்தினை நாம் எங்கேனும் கான முடியாது. அவர்கள் எழுதிய புத்தகத்தில் கூட அவர்களின் உருவம் இருப்பதை அம்மை விரும்பவில்லை என்றே கூறலாம். குழுப் புகைப்படங்களிலும், தனது குழந்தைகளிடம் அவர்கள் இருக்கும் போது தன்னிச்சையாக எடுத்த புகைப்படங்களில் மாத்திரமே அவர்களின் உருவத்தை கானலாம். இதற்கான காரணத்தை அம்மை 1948 ஆம் ஆண்டில் அவர் எழுதிய ' அவருடைய சாயலில் நான் விழிக்கும் வரை ' (Till I awake in His likeness) எனும் புத்தகத்தில் அவர் கூறுகிறார்.

அம்மையின் மொழியில்...

' என்னை விட அழகில் குறைந்தது இவ்வுலகில் வேறு ஏதுமில்லை என்றே நான் கருதுகிறேன். நான் சேராமலே இந்த உலகில் அழகற்ற காரியங்கள் அநேகம் உருவம் கொன்டுள்ளது '

என்று கூறியுள்ளார்.



# இயேசு பிரானை காட்டிக் கொடுத்த ‘யூதாஸ்’ ஸ்காரியோத் (ஜூடாஸ்) பெற்ற ரோமன் வெள்ளி காசு (தினார்) வரலாறு




தோழர் ஜி.சம்சுதீன் (எ) சுல்தான்
சேலம் பாரா மஹால் நாணயச் சங்க இயக்குனர், சேலம்-1


அலெக்சாண்டர் படையெடுப்பால் வட இந்தியாவிற்கும், கிரேக்கத்திற்கும் தொடர்பு ஏற்பட்டது. வணிகம் மூலம் தென்னிந்தியாவிற்கும், ரோமபுரிக்கும் தொடர்பு ஏற்பட்டது.

30 வெள்ளிக்காசுகளுக்காக ‘யூதாஸ்’ (ஜூடாஸ்) எனும் சீடனால் இயேசுநாதர் காட்டிக் கொடுக்கப்பட்டு, சிலுவையில் அறையப்பட்டது. இந்நாணயத்தின் பொருட்டே என்றால் அது மிகையாகாது. பைபிளில் இந்நாணயத்தைப் பற்றிய குறிப்புள்ளது. குருடனுக்கு கண்ணொளி வழங்கியது. முடவனை நடக்க வைத்தது. தானே இறந்தபின் மூன்று நாட்கள் கழித்து உயிருடன் பிறந்தார் என்பதை நாம் அறியலாம். எது எப்படி இருப்பினும், அன்று உலகம் போற்றிய பேரரசன் ‘டைபீரியஸ்’ இன்று மக்கள் நினைவில் இல்லை.

'பாரபாஸ்'- திருடனை விடுதலை செய், ‘இயேசுவை’ சிலுவையில் ஏற்று என்பவரை உலகம் போற்றி வணங்குகிறது என்பது நிதர்சனமான உண்மை. ரோம வணிகர்கள் பயன்படுத்திய வெள்ளிக் காசுகள் சூரிய ஒளியில் மின்னுவது ஏன்?

**பதில்:** அக்காலத்தில் வெள்ளியில் இருந்து தங்கம் பிரிக்க தெரியாத காலம் ஆகும். அதனால் தங்கத்தின் கலவையினால் மின்னும் தன்மை கொண்டதாகும். தமிழக பெருவழிகளில் கிடைக்கும் ரோமானிய காசுகள் மட்டுமின்றி அவர்கள் விட்டுச் சென்ற அணிகலன்களும் கிடைத்துள்ளன.

யவன ரோம வணிகர்கள் பாலக்காட்டு கணவாய் வழியாக கொங்கு நாட்டின் ஊடே பயணம் செய்து, தமிழகத்தின் பிறப்பகுதியில் உள்ள நகரங்களுக்கு சென்றனர். யவனர் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியங்களில் முழுவதும் பரவி கிடக்கின்றன.

குறிப்பாக அகநானூற்று பாடல் 149 இல் எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார் பாடல் - சேரலர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

**‘சுள்ளிஅம் பேரியாற்று வெண் நுரை கலங்க,**
**யவனர் தந்த வினை மாண் நன் கலம்**
**பொன்னொடு வந்து கறியொடு பெயரும்**
**வளம் கெழு முசிறி’ - அகநானூற்று பாடல் 149**

இப்பாடலில் ‘பேரியேறு சேர அரசருக்கு உரித்தானது என்றும், அவ்வழகிய ஆற்றின் வெண்ணிற நுரை சிதறுமாறு தொழில் மாட்சியமைப்பட்ட யவனர்கள் கொண்டு வந்த நல்ல மரக்கலம், பொன்னை விலையாகக் கொடுத்துவிட்டு மிளகு மூட்டைகளை ஏற்றிச் செல்லும் என்றும், இத்தகைய வளம் பொருந்திய முசிறிப்பட்டணத்தை பற்றிய சான்றுகள் கூறுகிறது. இந்தியாவில் கடல் கடந்து வாணிபத்திற்காக ரோமானியர்கள் பயன்படுத்திய ரோமன் வெள்ளிக்காசுகளின் எடை 3.200 மில்லி கிராம் கொண்டது.

**காசு முன்புறம் :** டைபீரியஸ் மன்னரின் திரு உருவம் கொண்டது. திருவருவம் சுற்றிலும் ரோமன் எழுத்து பொறிப்பு கொண்டது.



**காசு பின்புறம்:** ரோமன் நாட்டு இளவரசி - தேவதை, அதனை சுற்றிலும் ரோமன் எழுத்து பொறிப்பு கொண்டது.



**வடிவம்:** ஒழுங்கற்ற வட்டம், விட்டம்: 1 3/4 செண்டிமீட்டர், காலம்: கிபி 14 - 37 ஆகும்.


# நன்மை செய்யும்படி உனக்குத் திராணியிருக்கும்போது....



பேராசிரியர் தே அ கிறிஸ்துதாஸ்

மிஷனெரி ஊழியத்தில் சோர்புகளும், ஏமாற்றங்களும், இனக்கரிப்புகளும் சகஜம். ஆனால் அதற்கு ஈடாக வெற்றிக் கீதங்கள் பாடும் வாய்ப்புகளுமுண்டு. அவ்வித வாய்ப்பொன்றை நாசரேத் மிஷனெரி ஆர்தர் மார்காஷியஸ் பெருமகனுக்கு அளித்தது உடையார்குளம் சபையாகும். 1882-83-ல் அவ்வூரில் ஒரு எழுப்புதல் உண்டாகி, அதின் பயனாக, அதுவரை எதிர்த்து நின்றவர்களனைவரும் விசுவாசத்துக்குக் கீழ்ப்படிந்தனர். உடையார்குளம் ஒரு கிறிஸ்தவ கிராமமாயிற்று. எஞ்சி நின்ற ஒரே பிறமதக்கோவிலும் இடிக்கப்பட்டது. சபையின் தொகை 398 ஆக உயர்ந்தது. ஆலயத்தில் இடவசதி பற்றாதிருக்கவே ரூ. 2000/- செலவில் புதிய ஆலயம் கட்டத் தீர்மானித்தனர். மார்காஷிஸ் மிஷனிலிருந்து ரூ. 1500/- உதவித்தொகை தர முன் வந்து, அச்சபையை உற்சாகப்படுத்தினார். சபையாரும் தாங்கள் கொடுக்க ஒப்புக்கொண்ட ரூபாய் 500-ஐத் தங்களுக்குள் வரி வைத்து சேகரிக்கத் தொடங்கினார்கள். புதிய ஆலயம் கட்டப்படும் வரையில், பழைய ஆலயத்தின்முன் ஒரு பந்தல் அமைத்து இடக்குறைவை நிவிர்த்தி செய்துகொண்டனர்.

**ஆலயம் கட்டுவதில் ஆர்வம் மிக்கவை திருநெல்வேலிச் சபைகள்.** குளத்துக்கடியில் புதிய ஆலயம் கட்டத் துவங்கின நாள் முதல் (ஆக. 1879) அது பிரதிஷ்டை ஆன நாள் வரை (டிசம். 1879) அதற்கான செலவு ரூ.644-ல் மிஷன் கொடுத்த ரூ. 50 நீங்கலாக மீதி ரூ. 594 ஐச் சபையாரிடம் பிரிப்பதில் ஓயாது உழைத்த ஆபிரகாம் முக்கந்தர் தன் மரணநேரத்தில் (மார்ச் 1880) சிமியோனின் கீதம்பாடி மகிழ்வுடன் மரித்தாரென்பது ஒரு வரலாறு.



மிஷனெரி ஆர்தர் மார்காஷியஸ்

நாசரேத் தேவாலயத்தில் இடம் போதவில்லை. ஆகையினால் அதைப் பெரிதாக்க வேண்டுமென்று மார்காஷிஸ் தீர்மானம் செய்து, அதற்கான முயற்சிகளிலீடுபடலானார். கடையனோடையிலும் சபை பெருகியதால், அங்கும் அந்தப் பிரச்சனையேற்பட்டது. அகப்பேய்க்குளம் ஆலயம் கேமரர் ஐயர் காலத்தில் கட்டப்பட்டது. பெருகிவரும் சபைக்கு அது சிறிதாக விருந்தது. உடையார்குளம் ஆலயமும் மழையினால் சேதமுற்று விழுந்துவிட்டது. இவைகளைப் பெரிதாக்கவும் (அல்லது புதிதாகக் கட்டவும்) அதிகப் பணம் தேவைப்பட்டது. சபை மக்களோ ஏழைகள். ஆகையால் அவர்கள் தங்களால் கொடுக்கக்கூடியதைக் கொடுக்க அவர்களை ஏவினதுடன், தானும் தன் நண்பர்களுக்குக் கடிதங்கள் எழுதி உதவி கேட்கலானார். பணங்கள் கொஞ்சங் கொஞ்சமாய் வரத் துவக்கின.

ஆலய ஆராதனைகளில் முதலிடம் பரிசுத்த நற்கருணை ஆராதனைக்கேயென்பது மார்காஷிஸின் துணிவு. ஆகையினால், 1883-ம் ஆண்டு முதல் நாசரேத் ஆலயத்தில் எல்லா ஞாயிறுகளிலும் அத்திருவிருந்து பரிமாறப்படும்படி செய்தார். மூக்குப்பீறி, கடையனோடை, உடையார்குளம், பிள்ளையன்மனை ஆலயங்களில் மாதமிருமுறை நற்கருணை ஆராதனை நடத்தப்படக் கட்டளை கொடுத்தார். தவிர பரிசுத்தவான்களின் திருநாட்களிலும், நாசரேத்தில் அந்நாட்களுடன் வியாழக்கிழமைதோறும் காலை 7 மணிக்கு திருவிருந்தாராதனை நடத்தப்பட்டது.

இக்காலமெல்லாம், இளமையில் அவரைப் பிடித்திருந்த ஆஸ்த்மா வியாதியின் தொந்தரவு இருந்துகொண்டேயிருந்தது. ஆனால் இவ்வாண்டில் (1883) அது அவரை அதிகப் பாடுகளுக்குள்ளாக்கிற்று. வைத்தியனான அவருக்கே, இனி ஓய்வின்றி வேலை செய்தால், தன் உடம்பின் பெலவீனம் அதிகரித்துத், தான் பயனற்ற நோயாளியாக நேரலாம் என்று தோன்றிற்று. எனவே, அவர் ஒன்றிரண்டு ஆண்டுகள் விடுமுறைபெற்று இங்கிலாந்துக்குச் சென்று வரத் தீர்மானித்து, அதின்படியே சுயநாட்டுக்குப் போனார் (7-6-1883).

மார்காஷிஸ் விடுமுறையில் சென்ற நாட்களில் முதலூர் மிஷனெரியான H. B. நார்மன் ஐயர் (Rev. H. B. Normon) நாசரேத் சேகரத்தையும் சேர்த்து மேற்பார்வை செய்தார்.

C. M. S. மிஷனெரிமார் 'நற்போதகம்' என்ற பெயர்கொண்ட ஒரு மிஷனூழிய மாதாந்தரச் செய்தி ஏட்டை 1849 பிப்ரவரி முதல் வெளியிட்டுவந்தனர். அந்த மாத ஏடு இன்றுவரை நிலைத்து, நெல்லை அத்தியட்சாதீன மாதவெளியீடாக விளங்குவதை அறிவோம். அப்பத்திரிகை மிகுந்த பயனுள்ளதாக சிறப்புடன் நடந்துவந்ததைக் கண்ட மார்காஷிஸ், S. P. G. மிஷனுக்கும் அது போன்ற ஒரு மாத வெளியீடு தேவையென்றுணர்ந்து, 1882 ஆகஸ்டு 1-ம் தேதி முதல் 'சிலுவைக்கொடி' (I he Banner of the Cross) என்ற பெயருடன் ஒரு மாதந்தரப் பத்திரிகையைத் துவக்கினார். அந்தப் பத்திரிக்கையின் 12-வது மலரில் (ஜுலை 1883), மார்காஷிஸ் ஐயர் ஏழாண்டுச் சேவைக் காலத்தில் நிறைவேற்றிய பணிகளின் பட்டியலொன்று தரப்பட்டிருக்கிறது.

**அதில் காணப்படுபவை:-**

1. மருத்துவ நிலையத்தைப் பெரிதாக்கி விருத்தி செய்தார்;
2. அனாதைச் சாலைகளை நிறுவினார்;
3. கைத்தொழிற் சாலையை ஸ்தாபித்தார்;
4. ஆண், பெண் மத்திபப் பாடசாலைகளை நிறுவினார்;
5. ஆழ்வார்திருநகரி மத்திபப் பாடசாலை, பெண்கள் பள்ளி இவற்றை உருவாக்கினார்;
6. நாசரேத் தேவாலயக் கிராதியறை கட்டும் திட்டத்துடன், பல ஆலயங்களையும் கட்டினார்:
7. ஆராதனைகள் அலங்காரமான நடைபெறச் செய்தார்;
8. திருநாளாசரிப்பு, ஞாயிறு நற்கருணை; மத்திய சுவிசேஷப் போதனை, சுவிசேஷ ஊழியம், தனிஜெப வழக்கம், வேதாகம வகுப்புகள் முதலிய ஆவிக்குரிய பணி அபிவிருத்தி;
9. சபை தன்னாதரவுப் பழக்கம்;
10. நாசரேத்தில் கல் பாவிய பெரும்பாதைகள்ணு
11. ஸ்தல சுயாட்சித் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட லோக்கல் பண்டு போர்டுகளில் (District and Taluk Boards) உறுப்பினராக இருந்து நாசரேத்துக்கும் பிர கிராமங்களுக்கும் ஆற்றிய நற்பணிகள்;
12. அவர் செய்து முடித்த பல தர்ம காரியங்கள், ஏழைகளுக்குச் செய்த உதவிகள்;
13. குருமார், உபதேசிமார் முதலிய ஊழியர் தங்கள் கடமைகளைச் சரிவர நிறைவேற்ற உதவித் திறமையுடன் மேற்பார்வை செய்தது - என்பனவாகும்.
14. மார்காஷிஸ் ஐயர் துவக்கி வெளியிட்ட இப்பத்திரிகையில் காணப்பட்ட அம்சங்கள், அது எவ்வளவு பயனுள்ள பத்திரிகையாயிருந்தாரென்றும் காட்டுகின்றன.

**அவ்வம்சங்கள்:-**

1. ஒரு பிரசங்கம்
2. ஒரு வேதாகமப் புத்தக வியாக்கியானம் - மாதத்திற்கு ஒன்றிரண்டு அதிகாரங்கள் மட்டும்;
3. பரிசுத்தவானொருவரைப் பற்றிய ஓர் உரையாடல்;
4. விஞ்ஞான அறிவுதரும் ஒரு கட்டுரை;
5. நாஸ்திகனொருவனைக் குறித்த ஒரு விகடம்;
6. கிறிஸ்தவ சன்மார்க்கக் கதை;
7. ஒரு தமிழ்க் கவி (யாரோ உபதேசியாரோ, சபையாரோ எழுதின கவி);
8. திருச்சபைச் செய்திகள்;
9. அனைத்துலகத் திருச்சபைச் செய்திகள்;
10. அறிவிப்புகள் (திருமணம், பிறப்பு, இறப்பு; கட்டடத்திறப்பு; பள்ளிக்கூடம் போன்ற தாபனங்களிலிருந்து வேலைக்கு அல்லது சேர்க்கப்பட அழைப்பு.)
11. விளம்பரங்கள் முதலியன

இங்கிலாந்துக்குப் போன மார்காஷிஸ், அங்கு நான்கு மாத காலம் கூட முழுமையாகப் பின்னிடவில்லை. அவருடைய எண்ணமும் சிந்தையும் நாசரேத்தையும் ஊழியத்தையும் பற்றியேயிருந்தன. ஆகையினால் வியாதி நீங்கிச் சற்றே உடம்பு தேறினவுடன் இந்தியாவுக்குத் திரும்பி, டிசம்பர் தொடக்கத்தில் நாசரேத் வந்து சேர்ந்தார்.

அவர் வந்த சில நாட்களுக்குள், நாசரேத்தில் காலரா தொடங்கிவிட்டது. முதல் 13 நாட்களில் 17 பேர் இறந்தனர் (23.12.83 - 2.1.84). பின் ஜனவரி 8-ம் தேதி 4 பேர் மரணமாயினர். மிகுந்த கலக்கம் உண்டாயிற்று. மார்காஷிஸும், 'திரசர்' ஞானமுத்தும் நோய்வாய்ப்பட்டவர்களை அவர்களுடைய வீடுகளில் வைத்தே மருந்து கொடுத்துச் சுகப்படுத்தினர். அவ்வாறே அவர்கள் கிராமங்களுக்கும் சென்று மருத்துவம் செய்தனர். சிற்றூர்களிலும் மார்காஷிஸும் ஊழியரும், அவ் விஷ வியாதி மேலும் பரவாதிருக்க எடுத்துக்கொண்ட முயற்சியினால் மூன்று வாரங்களுக்குள் அது ஒய்ந்தது.

1884-ம் ஆண்டுக் கணக்கின்படி நாசரேத் சேகர ஊழியர்: - மிஷனெரி ஒருவர்; இந்திய குருமார் மூவர்; உபதேசிமார் நால்வர்; ஆசிரிய, ஆசிரியைகள் 27; உதவி ஆசிரியர், அண்ணாவிகள் (Monitors) - 23; ஸ்தாபனங்கள்: - மருத்துவ நிலையம் - 1; அனாதைச் சாலைகள் - 2; கைத்தொழிலகம் - 1; ஆண் பெண் போர்டிங் மத்திபப் பள்ளிகள் - 2; ஆண்கள் மத்திபப்பள்ளி (Day School) - 1; ஆண்கள் கிராமப் பள்ளிகள் - 10; பெண்கள் கிராமப் பள்ளிகள் - 3; இருபாலார் கிராமப்பள்ளிகள் - 17; சபைக் கணக்கு: சபைகள் - 46; ஞானஸ்நானம் பெற்ற கிறிஸ்தவர்கள் - 5255; ஞானஸ்நானம் பெறாத கிறிஸ்தவர்கள் - 898; நற்கருணைக்காரர் 1384; எழுத வாசிக்கத் தெரிந்தவர்கள் 1330; சபை வருமானம் ரூ. 3682-4-8 (3682-29)

சபைகள் தன்னாதரவுத் திட்டத்தில் முன்னேறித், தங்கள் உபதேசிமாரின் ஊதியம் முழுவதையும் தாங்களே தங்கள் சபை வருமானத்திலிருந்து கொடுக்கக்கூடியவைகளாயிருக்க வேண்டுமென்பது மார்காஷிஸின் விருப்பம். அத்திட்டத்தை அவர் சபைகளில் சொல்லி, மக்களை ஊக்குவித்துவந்தார். அதன் பயனாக இவ்வாண்டில் (1884) நாசரேத் மூக்குப்பீறி, கடையனோடை, எருசலேம், பன்றிமடல் என்னும் ஐந்து சபைகளும் தன்னாதரவில் 3/4 பங்கு முழுமையும், பிள்ளையன்மனை, அகப்பேய்க்குளம், வாழையடி, குளத்துக்குடி என்னும் நான்கும் 1/2 பங்கும், மீதிச் சபைகளில் சில 1/3-ம், மற்றவை 1/4ம் தன்னாதரவு கொண்டன. மிகவும் சிறிய சபையுங்கூட தன் உபதேசியாரின் தன்பலத்தில்

கால் பகுதியாவது தானே கொடுத்துத் தாங்கவேண்டும் என்று ஐயர் கட்டாயப்படுத்தினார். சென்னை M. D. C. இதையறிந்து ஒரு பாராட்டுத் தீர்மானம் நிறைவேற்றினர்.

தன்னாதரவுத் திட்டத்தில் நாசரேத் சேகரம் முன்னேறத் தொடங்கிய ஆண்டிலிருந்து, அச்சேகரத்துக்கு S.P.G. சங்கத்தார் கொடுத்து வந்த சிறப்பு பஞ்ச நிதி உதவித்தொகையும், மொத்த உதவித்தொகையையும் (Special Famine Fund Grant, and Block Grant) கொஞ்சங் கொஞ்சமாக (ஆண்டுதோறும்) குறைத்துக்கொள்ளும்படி மார்காஷிஸ் அச்சங்கத்தாருக்கு எழுதிவிட்டார். அதின்படி, பஞ்ச நிவாரண நிதியிலிருந்து வரும் உதவித்தொகையில் 1881-'82-ல் ரூ 555-உம், 1882-' 83ல் ரூ. 388-உம், 1883-'84-ல் ரூ.267-உம் குறைக்கப்பட்டது. மொத்த நிதி உதவித்தொகையில் 1882-'83- ல் ரூ. 246-உம், 1883 -'84 -ல் ரூ. 753 -உம் குறைக்கப்பட்டது. 'உதவித்தொகை போதாது, இன்னமும் அதிகம் கொடுங்கள்' என்று கேட்பதுதானே இயல்பு? ஆனால், மார்காஷிஸோ 'குறைத்துக்கொள்ளுங்கள்' என்கிறார். என்னே அவரது தொலைநோக்கு!

சபைகள் தன்னாதரவில் வளரவேண்டும், தம் கால்களில் நிற்க வேண்டும், தற்பெருக்கம் கொள்ளவேண்டும், தன்னாட்சியில் பயில வேண்டும் என்று பெருநோக்குள்ள மிஷனெரி மட்டுமே இவ்வுயர் நோக்குடையவராயிருப்பவரேயன்றி, வேறெவருமிரார்.

1884-ல் பல ஆலயங்கள் (திரும்பவும் புதிதாக அல்லது பெரிதாகக்) கட்டப்படும் நிலையிலிருந்தன. நாசரேத் ஆலயத்தில் கிராதியறையைச் சற்றுப் பின்னால் தள்ளிப் பெரிதாகக் கட்டிமுடித்த மார்காஷிஸ் ஐயர், அதை ஆகஸ்டு 24-ம் நாள் (1884) பிரதிஷ்டை செய்தார். அவ்வாராதனையில் ஆறு மிஷனெரிமாரும் பதினான்கு இந்திய குருமாரும் கலந்துகொண்டனர்.

கடையனோடை ஆலயத்திலும் அவ்வாறே கிராதியறையைப் பின் தள்ளிக் கட்டி இடப்பெருக்கம் உண்டாக்கும் பணியில் ஐயர் ஈடுபட்டார். உடையார்குளத்திலும், அகப்பேய்க்குளத்திலும் புதிய ஆலயங்களைக் கட்டும் வேலை ஆரம்பிக்கப்பட்டது. மார்காஷிஸ் அவ்வேலைகளை நேரில் மேற்பார்த்தார். ஆயினும் பணமுடையினால் வேலை தாமதப்பட்டது.

ஆழ்வார்திருநகரி, அதிகப் பிரயாசத்தின் பயனாக, ஆலயம் கட்டுவதற்கான ஒரு மனை வாங்கப்பட்டது. இந்துக்களின் எதிர்ப்பினால் மனை கிடைப்பது இத்தனை ஆண்டுகளும் கூடாத காரியமாகவேயிருந்தது. இறுதியில் ரூ. 429 கொடுத்து மார்காஷிஸ் இம்மனையை வாங்கினார். பின், 'இப்போ ஆலயம் கட்டப் பணம் வேண்டுமே, என்று மார்காஷிஸ் கவலையோடு எழுதினார் (1884).

1869 பிப்ரவரி 1-ம் நாளில் திருநெல்வேலி S. P. G., C. M. S., மிஷனெரிமார் சென்னைக் கண்காணியரின் தலைமையில் கூடினபொழுது, திருநெல்வேலிக் கிறிஸ்தவ சபைகள் வெறும் 'மிஷன் சபைகளா'யிருக்கும் நிலையினின்று மாறி, ஒரு திருச்சபையாகப் பரிணமிக்க வேண்டிய காலம் வந்துவிட்டது என்று உணர்ந்தனர். ஆயினும் S. P. G. சபைகளையும் C. M. S. சபைகளையும் ஒரே 'திருச்சபை'யாக இணைக்க மனமற்று, தங்கள் தங்களுக்கு வெவ்வேறான ஆட்சி ஒழுங்கு செய்துகொள்ளத் தீர்மானித்தனர். அதின்படி S. P. G. மிஷன்களை ஒரு 'பிரதேசத் திருச்சபைக் கழக'த்தின்கீழ் (The Tinnevelly S. P. G. Provincial Church Council) இணைத்தனர். கிறிஸ்தியா நகரம், முதலூர், சாயர்புரம், புதியம்புத்தூர், புதுக்கோட்டை, ராமநாதபுரம் மிஷன்களாகும். மிஷன் ஊழியங்களின் பொதுப் பிரச்சனைகள், ஆட்சிமுறைகள், ஒருங்கிணைப்பு முதலியவை அக் கழகத்தின் பொறுப்பு. மிஷனெரிமாரனைவரும், இந்திய குருமாரும், ஊழியர், சபையார் முதலியவர்களின் பிரதிநிதிகளும் கழக உறுப்பினராயினர். ஒவ்வொரு மிஷனுக்கும் பிரதேசக் கழகத்திற்குக் கீழ்ப்பட்ட 'வட்டாரக் கழகம்' (District Church Council) ஏற்படுத்தப்பட்டது. இக்கழகத்திற்கு வட்டார மிஷனெரியே தலைவர். குருமாருடன், சபை மக்கள், உபதேசிமார், ஆசிரியர் முதலிய ஊழியரின் பிரதிநிதிகள் உறுப்பினர்.

மார்காஷிஸ், சட்டதிட்டங்களின் வரையறுப்புக்குள் அமைந்து மிஷன் வேலை செய்வதை விரும்பவில்லை. சட்டதிட்டங்கள், பிரமாணங்கள் முதலியவை மிஷனெரியின் தனி முயற்சிக்கும் சுயாதீனத்துக்கும் இடையூறு விளைவித்து, கட்டுகளுக்குட்படுத்தி, முன்னேற்றத்தைத் தடுப்பவையென்று எண்ணினார். சபை மக்களுக்கு அதிகமான பிரதிநிதித்துவம் கொடுப்பதும் தவறு என்று நம்பினார். ஆனால், ஒரு இளம் மிஷனெரியாக, கால்டுவெல், ஆதம்சன், கோர்ண்ஸ், பில்லிங் போன்ற மூத்த மிஷனெரிமாரை எதிர்க்க அவர் தயங்கினார்.

நாசரேத் வட்டாரத் திருச்சபைக் கழகத்தின் உறுப்பினர் மிஷனெரி 1, குருமார் 3, ஊழியர் பிரதிநிதிகள் 22, சபைப் பிரதிநிதிகள் 69, மொத்தம் 95. 'சபைப் பிரதிநிதிகள் வட்டார, பிரதேசக் கழகங்களில் பெருவாரியிருப்பதினால் மிஷனெரிமார், குருமார் முதலியவர்களின் சுயாதீனம் பாதிக்கப்படுகிறது' என்றார்.

இவ்வுண்மை வட்டாரங்களின் தன்னாதரவு முயற்சி நடபடிகளில் தெளிவு என்று மார்காஷிஸ் சாதித்தார். குருமார், உபதேசிமார் முதலிய முக்கிய ஊழியரின் சம்பளத்தை வட்டாரக் கழகமே கொடுத்து வந்ததினால், குருமாரின்மீது அதிகாரம் செலுத்துவதற்கு சபைப் பிரதிநிதிகள் முற்படுவது இயற்கைதான். ஆகையால், அவ்விதம் நேரிடாதபடித் தடுப்பதற்கான சட்டங்களியற்ற வேண்டும். இல்லையெனில் 'குருமார் சபையாரின் அடிமைகளாகி விடுவர்: பிரசங்க பீடத்தில்கூட சபைப் பிரதிநிதிகளின் கைக்கருவிகளாக மாறிவிடுவார்கள்; வெளியேயும் அவர்களது பொம்மலாட்டத்துக்குள்ளாகிப்போவார், '' என்று அச்சம் தெரிவிக்கிறார். 'மேலும், குருமார் சபையாரின் மனதுக்கேற்க அருளுரைகள் ஆற்ற வேண்டியதாகிவிடும். குற்றங்குறைகளையும் பாவங்களையும் கண்டிக்கமுடியாது. நன்மை செய்தற்கான சொற் சக்தியையும் இழந்துவிடுவார்' என்கிறார்.

பிரதேசக் கழகத்தினர் இந்திய குருமாரின் சம்பளம், அலவன்ஸ் முதலியவற்றை நிர்ணயிக்கும் அதிகாரத்தையும், குருமாரை ஒரு வட்டாரத்திலிருந்து வேறொரு வட்டாரத்திற்கு வட்டார மிஷனெரிமாரைக் கலந்துகொள்ளாமலே மாற்றுவதற்குரிய உரிமையையும் தங்களிடத்தில் வைத்துக்கொண்டதும், வட்டாரக் கழகக் கூட்டங்களில் மிஷனெரிதான் தலைவராயிருக்க வேண்டுமென்பது அவசியமல்ல

வென்றும், சபைப் பிரதிநிதிகளிலொருவரைத் தலைவராகத் தெரிந்துகொள்ளலாமென்றும் சட்டமியற்றியதும் மார்காஷிஸை மிகுந்த மனக்கிலேசத்துக்கும் ஐயப்பாடுகளுக்குமுள்ளாக்கின. மேலும், சபைப் பிரதிநிதிகள் எண்ணிக்கையில் பெருவாரியாயிருந்ததினால், குருமாருடைய வாக்குகளுக்கு (votes) பெலனேயில்லை. 'அவர்கள் 'வோட்' பண்ணுவதும் ஒன்றுதான், பண்ணாதிருப்பதும் ஒன்றுதான்' என்று அல்லலுறுகிறார்.

அவரது இக்கருத்துக்கள் பிற்போக்கானவையென்று கால்டுவெல், கோர்ண்ஸ் போன்ற முதியவர்களால் வர்ணிக்கப்பட்டது அவருக்குப் பாரமாயிருந்தது. எனினும் ஏதும் செய்யக்கூடாதவராயிருந்தார்.

இப் 'பாரங்கள்' ஒரு புறமிருந்தாலும், தன்னுடைய சபை, பள்ளிக்கூட, மருத்துவ, சுவிசேஷப் பணிகளில் அவர் எக்குறைவும் வைத்தாரில்லை. அவருடைய ஊழியத்தில் கிட்டிய பயன் அவரை அதிக மகிழ்ச்சியடையச் செய்தது.

ஆண், பெண் போர்டிங் பள்ளிகளில் முறையே 127, 167 மாணவ மாணவியரிருந்தனர். இப்பள்ளிகளின் மேம்பாட்டைச் சிலாகித்த கல்வி இலாக்கா இயக்குநர் மத்திபப்பள்ளி, உயர்துவக்கப்பள்ளி (Upper Primary) 'அரசுத் தேர்வுகள் நடத்தும் மையத்தலமா'க நசரைப் பள்ளிகளை உயர்த்தினார். பெண்கள் கல்வி ஆய்வாளர் (Inspectress of Girls School) நம் பெண்கள் பள்ளியைச் சோதித்து, 'இப்பள்ளியில் உபாத்திமைத் தொழிற் கல்விச் சான்றிதழ் பெற்ற அநேக ஆசிரியைகள் பணியாற்றுவது அதிகத் திருப்தி தருகிறது. கல்வி அபிவிர்த்தியும் வெகு திருப்தி அளிக்கிறது. தையல் வேலை. அதிலும் 5-ம், 6-ம் வகுப்புப் பெண்களின் சித்திரவேலைத் தையல். நல்ல உயர்நிலையிலிருக்கிறது. ஒரே ஒரு பெண்ணைத் தவிர, மற்றனைவரும் உயர்ந்த சதவிகித மதிப்பெண் பெற்றுள்ளார்கள்' என்று வரைந்தார். டிப்டி இன்ஸ்பெக்ற்றரும் **'திருநெல்வேலி மாவட்டத்திலேயே சிறந்த முறையில் நடத்தப்படுகிற பெண் போர்டிங் பள்ளிகளில் இதுவொன்று'** என்றெழுதினார்.

அந்நாட்களில் நாசரேத் பெண்கள் பள்ளி மட்டுமே தன் மாணவிகளை அரசு நடத்திய மத்திபப் பள்ளி இறுதித் தேர்வுக்கு அனுப்பிவந்தது. **'ஐரோப்பிய மேற்பார்வையில்லாதிருந்தும், இப்பள்ளி அரசுத் தேர்வுகளில் இத்துணை பெரிய வெற்றி காண்பதற்கு அதில் பணியாற்றும் இந்திய ஆசிரியைகளின் உழைப்பே காரணம். அவர்களையே இப்பெருமை சேரும்'** என்று மார்காஷிஸ் பெருமிதத்துடன் எழுதுகிறார்.

பெண்களின், அதிலும் நன்றாய்ப் படித்து முன்னேறக்கூடிய பெண்களின், வாழ்க்கை சமுதாயத்துக்கும் திருச்சபைக்கும் பயன்மிக்கதாக விளங்கக்கூடாதபடி தடுக்கும் ஒரு பெருந்தீமை இளம் வயதிலேயே அவர்களைத் திருமணம் செய்விப்பது. மிஷனெரிமார் அவ்வழக்கத்தை ஒழிக்கப் பல முயற்சிகளெடுத்தனர். ஆயினும் தோல்வியே கண்டனர். மார்காஷிஸ், அதை ஒழித்துவிடத் தீவிர நடவடிக்கை எடுப்பாராய், தகுந்த வயது வருவதற்குள் தன் மகளுக்குக் கலியாணம் செய்யும் ஊழியன் உடனே வேலை நீக்கமாவார், என்று ஒரு சட்டம் பிறப்பித்தார். 'ஊழியர் நன் மாதிரி காண்பிப்பின் சபையார் அதைப் பின்பற்றுவார்கள்' என்று மார்காஷிஸ் காரணம் காட்டி எழுதினார். அது முதல் நாசரேத் மிஷனில் அவ்வழக்கம் மறையத் துவக்கினது.

மத்திபப்பள்ளி இறுதி வகுப்புடன் கல்வி முடிவடைந்து விடுவது ஒரு பெருங்குறை. 'தொடக்க மட்டத்திலிருந்து மத்திப நிலைக்கு உயர்த்தப்பட்ட நாசரேத் ஆண், பெண் போர்டிங் பள்ளிகளும் ஆழ்வார்திருநகரிப் பள்ளிக்கூடமும் உயர்தரக் கலாசாலைகளாக்கப்பட வேண்டியது அவசியம், ஆண்கள் போர்டிங் பள்ளி பூரண தன்னாதரவுடையதாக நடைபெறுகிறது. 'உயர்சாதி' இந்துக்களுக்காக புலாலில்லா போர்டிங் விடுதி ஆரம்பித்துள்ளேன். அதில் 15 இந்து வெள்ளாளச் சிறுவர் தங்கிப் படிக்கிறார்கள். நாற்பது 'உயர்குல' இந்துச் சிறுமிகள் கற்கும் ஆழ்வார்திருநகரி இந்துப் பெண்பாடசாலையும் தன்னாதரவு நிலை அடைந்துவிட்டது'. என்று ஐயர் வரைகிறார்.

ஆண்களின் அனாதைப் பள்ளியில் ஒரு விபத்து. மே மாதம் 20-ம் நாள் (1884) நள்ளிரவு 'உறங்கும் அறை'யில் நூறு சிறுவர் தூங்கிக் கொண்டிருந்தனர். பனை ஓலை வேய்ந்த அவ்வறைக் கூரையில் திடீரெனத் தீப்பற்றிக்கொண்டது. நூறுபேரும் வெந்து அழிந்திருப்பர். ஆனால் அனாதைகளின் ஆதரவாளரான ஆண்டவர் கண்ணுறங்கவில்லை! எப்படியோ இரண்டொரு சிறுவர் விழித்துக்கொண்டு கூச்சலிட, அனைவரும் எழுந்து, ஓடித் தப்பினர். அன்றைய நாட்குறிப்பில் ஒவ்வொரு வார்த்தையிலும் மார்காஷிஸின் நன்றியுள்ளம் பிரதிபிம்பிக்கிறது.

அனாதைகளின் கைத்தொழிற் கல்வி அபிவிருத்தியில் ஐயர் வெகு கவனம் செலுத்தினார். தையல் பகுதி முன்னிலும் அதிகமான பயன்தரவேண்டி இவ்வாண்டில் அவர் ஒரு தையல் இயந்திரம் வாங்கிக் கொடுத்தார் (1884).

நாசரேத் பள்ளிக்கூடங்கள் மட்டுந்தான் மார்காஷிஸின் கவனத்துக்குரியவைகளாயிருந்தனவென்றல்ல. கிராமப் பள்ளிக்கூடங்களையும் உயர்த்த அவர் விரும்பினார். ஆகையினால் மூன்றாம் வகுப்புப் (Lower Primary) பள்ளிகளாகத் திறமையுடன் நடந்துவந்த எருசலேம், மூக்குப்பீறி, கடையனோடை, குளத்துக்குடி, பன்றிமடல், நாசரேத் கஸ்பா பள்ளிக்கூடங்களை உயர்தரத் துவக்கப் பள்ளிகளாக (Upper Primary), அதாவது 4-ம் வகுப்பு வரை கற்பிக்கும் பள்ளிகளாக்கினார்கள். 4-ம் வகுப்பினிறுதியில் அப்பள்ளி மாணவர் அரசுத் தேர்வு எழுதவேண்டும் (1885-86).

அதே சமயத்தில் நாசரேத் ஆண்கள் போர்டிங் மத்திபப்பள்ளியையும் உயர்தரக்கலாசாலை (High School) ஆக்கினார் (1885). இந்நடபடிக்கையைக் கால்டுவெல் அத்தியட்சர் பலமாய் ஆட்சேபித்தார். அவர், 'நாசரேத் உயர்தரப்பள்ளி தூத்துக்குடி S.P.G. கால்டுவெல் கல்லூரிக்குப் போட்டியாகத் தோன்றியுள்ளது' என்றார். அவருடைய எதிர்ப்பினால் 'நாசரேத் ஹைஸ்கூல்' நிலைப்பது பற்றி பலத்த சந்தேகங்கள் எழுந்தன. ஆனால் மார்காஷிஸ் விடுவதாயில்லை. அவர் கால்டுவெல் அத்தியட்சரையும் எதிர்த்தார். சென்னை அரசையும் எதிர்த்தார். M.D.C. உறுப்பினர்களின் ஆதரவை மட்டும் பெற்று, தன் உயர்தரப்பள்ளியை ஊர்ஜிதப்படுத்திக்' கொண்டார்! இறுதியில் அரசு அனுமதி தந்தது. அத்தியட்சரோ, 'நாசரேத் ஹைஸ்கூலை மூடுமட்டும் ஓய்வதில்லை' என்று

தீர்மானித்தார். தன் அத்தியட்ச பதவியின் முடிவு வரை முயன்று, ஓய்வுபெறும் முன் இக்கலாசாலையை ஓய்த்தும்விட்டார் (1891).

பள்ளிக்கூடங்கள் சிறுவர் சிறுமியர்க்குக் கற்பிக்கும் ஏதுக்கள். ஆயின், எழுத வாசிக்கத் தெரிந்திராத பெரியவர்களுக்குக் கல்வி தேவையில்லையா? தேவையே. மார்காஷிஸ் அதிலும் கவனம் செலுத்தினார். 1880-லேயே பெண்கள் முதியோர் கல்விக்கூடங்களை நாசரேத், மூக்குப்பீறி, எருசலேம், கடையனோடை, குளத்துக்குடி, பன்றிமடல் என்னும் சபைகளில் நிறுவி, உபதேசிமாரின் மனைவியரும், வேறு சில பெண்களும் அவற்றில் கற்பிக்கும்படி ஏற்படுத்தினார். துவக்கத்தில் நன்கு நடந்த இப்பள்ளிகள், காலக்கிரமத்தில், ஊக்கம் குன்றி தளர்ச்சியடைந்தன. 'கற்கும் பெண்களின் ஆர்வம் குறைந்ததும், அவர்கள் ஒழுங்காகப் பள்ளிக்குச் செல்லாததும், ஆசிரியைகளின் அசிரத்தையுமே அதற்கான காரணங்கள்' என்றுணர்ந்த மார்காஷிஸ், படிக்கும் பெண்களை ஒழுங்காகக் கற்க வரச்செய்வது ஆசிரியைகளின் பொறுப்பு என்றும், அப்பெண்கள் அரசின் உயர் துவக்கப் பரீட்சை எழுதத் (Upper Primary Examination) தகுதி பெறும்வரை படித்து, அப்பரீட்சையையும் எழுத வேண்டுமென்றும், ஆசிரியைகளுக்கு, வருட இறுதியில் அரசு தரும் உதவித்தொகையே சம்பளமாகத் தரப்படும் என்றும், நன்கு கற்கும் பெண்களுக்குப் புத்தகங்கள் முதலியனவும், கலியாணமாகாத பெண்கள் கற்க வரின் அவர்களது திருமணச் சமயத்தில் கலியாணச் சேலையும் வழங்கப்படும் என்றும் விதித்தார் (1885). அது முதல் இக்கல்விக் கூடங்கள் வெகு திறமையாய் நடந்துவரலாயின.

இந்தியக் கிறிஸ்தவர்கள் திறமையுடையவர்கள். பொறுப்பு ஒன்றை நம்பிக்கையுடன் ஒப்புவித்தால் அதை நன்கு நிறைவேற்றக்கூடியவர்கள் என்ற உண்மையை இக்காலத்தில் மார்காஷிஸ் விளங்கிக்கொண்டார். காலஞ்சென்ற J. F. கோர்ண்ஸ் ஐயர் (புதியம்புத்தூரின் மிஷனெரி) இறந்தபின் கோர்ண்ஸ் அம்மாள் நாசரேத் பெண்கள் போர்டிங் பள்ளியின் தலைவராகப் பணியாற்றினார் (1878 - 1880). அவர் 1880-ல் விலகிக் கொண்டார். அதின் பின் அப்பள்ளி பெயரளவில் மார்காஷிஸ் ஐயரின் நிர்வாகத்திலிருந்தது. அவர் எப்பொழுதாவது பள்ளிக்கூடத்தைப் போய்ப் பார்த்து வருவாரேயன்றி, மற்றப்படி, ஆசிரியைகளே. 'யாருடைய மேற்பார்வையுமின்றித் தாங்களே தங்கள் பொறுப்பை உணர்ந்து செயல்பட்டு' பள்ளிக்கு நற்பெயர் கிடைக்கச் செய்தனர். மார்காஷிஸ் அதைப் பாராட்டினார் என்பதனை முன்னர் கண்டுள்ளோம்.

1885-ல் அப்பள்ளிக்கு ஒரு இந்தியரையே தலைமை ஆசிரியராக்கத் தீர்மானித்த மார்காஷிஸ், R. பெரியநாயகம் ஐயரின் குமாரனான D. பெரியநாயகம் B. A. என்ற வாலிபரை அப்பதவியிலமர்த்தினார். அவர் அப்பள்ளியை உயர்தரக் கலாசாலையாக உயர்த்தினதுமன்றி, ஆசிரியரைப் பயிற்சி பள்ளிக்கான அரசின் அங்கீகாரத்தையும் பெற்றார். இச்செயல்களில் மார்காஷிஸ் ஐயர் அவருக்கு உறுதுணையாயிருந்தார். 'கின்டர்கார்ட்டன்' பிரிவொன்றும் 1885-லேயே இப்பள்ளியுடன் இணைக்கப்பட்டது. நாசரேத் பெண்கள் பள்ளியிலிருந்து மெட்ரிக்குலேஷன் பரீட்சைக்கு முதல் முறையாக அனுப்பப்பட்ட பெண்களில் முதல்வளாகத் தேறினது நாம்மெல்லாருக்கும் நன்கு அறிமுகமான பிரபல மருத்துவர் டாக்டர் R. வேதபோதகமவர்களின் தகப்பனார் D. வேதபோதகம் ஐயரின் கடைசித் தங்கை அன்னபூரணம் அம்மாள். மற்றொருவர் கெத்ஸி ஞானம் அம்மாள்.

**தென்னிந்தியாவின் முதற்பெண்கள் ஹைஸ்கூல்களிருந்தன:**

**ஆழ்வார்திருநகரி (1883),**

**நாசரேத் ஆண்கள் (1885),**

**நாசரேத் பெண்கள் (1886).**

1885-ல் முதலூர் மிஷனெரி H. B. நார்மன் ஐயர் போனபின், முதலூர், கிறிஸ்தியாநகரம் வட்டாரங்களையும் (Districts) நாசரேத்துடன் சேர்த்து மேற்பார்க்கும் பொறுப்பும் மார்காஷிஸ் ஐயரிடம் ஒப்புவிக்கப்பட்டது. அதினால் அவருடைய உத்தரவாதம் மிகவும் அதிகமாயிற்று. ஆனால் அவர் உவப்புடன் அதை ஏற்றுக்கொண்டார்.

பொருளாதார நிலை மூன்று வட்டராங்களிலும் குறைவுபடத் தொடங்கினதை அறிந்த நம் ஐயர், C. M. S. வட்டாரங்களில் சுமார் 24 வருடங்களாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்த 'சங்கப் பணம்' சேகரிக்கும் முறையைத், தன் சேகரங்களிலும் கையாளத் தீர்மானித்தார். ஆனால் அதில் 'கட்டாய அம்சம்' எதுவுமிருக்கக் கூடாது என்று விரும்பி, குடும்பத் தலைவர்கள் ஒவ்வொருவரிடத்திலும் ஓர் 'உண்டியல் கலயம்' கொடுக்கப்பட வேண்டும், அதில் அவர்கள் ஆண்டு முழுவதும் கொஞ்சங் கொஞ்சமாகப் பணம் சேர்த்து, வருட இறுதியில் அக்கலயங்களைத் தேவாராதனையில் படைக்கவேண்டும்., (அவ்வாராதனையின் பெயர் 'சங்கப் பண்டிகை ஆராதனை.') பின் கலயங்கள் உடைக்கப்பட்டு, தொகைகளை எண்ணி, 'ஸ்தோத்திர ஆராதனை'யில் அப்பணத்தைப் படைக்க வேண்டுமென்று தீர்மானித்து, உடனே செயல்பட்டார்.


சுமார் நான்கு வருடங்களாக இம்முறை வழக்கத்திலிருந்து வந்தது. ஆனால் 'சங்கக் காணிக்கை' என்ற பதத்தையும், கலயம் கொடுக்கப்படுவதையும் நாசரேத் வட்டார மக்கள் விரும்பவில்லை. ஆகையால், 1887 முதல் 'சங்கப் பணம்' என்ற பெயரை 'தன் திட்டக் காணிக்கை' (Free-will Offering-சுய நிர்ணயக் காணிக்கை) என்று மாற்றி, ஈஸ்டர் வாரத்தில் அதைப் படைக்க ஏற்பாடு செய்தார். பின், பிற வட்டாரங்களிலும் இச்'சங்கப் பணம்'., வருடாந்தரப் படைப்பு, தசமபாகக் காணிக்கை என்று பலவாறு பெயர் மாற்றம் பெற்றது.

தெய்வ காரியங்களுக்கு உற்சாகமாய்க் கொடுக்கப் பழகின மக்களின் நலனுக்காக, சில நல்ல திட்டங்களை உருவாக்க வேண்டும் என்று தீர்மானித்த நம் ஐயர், நன்கு ஆலோசித்து, இரு அரும் பெருங்காரியங்களைச் செய்து முடித்தார்.

ஒன்று: இந்திய கிறிஸ்தவ சிக்கன சகாய நிதி என்னும் 'S. P. G. நாசரேத் சுதேச கிறிஸ்தவ சகாய நிதி' (S. P. G. Nazareth Indian Christian Provident Fund). இது 1887 ஜனவரி 1-ம் நாள் விக்டோரியா ராணியாரின் பொன் விழா ஞாபகார்த்தமாக நிறுவப்பட்டது. மார்காஷிஸே அதற்குத் தலைவரும் காரியதரிசியுமானார்.

மற்றொன்று: 'திருநெல்வேலி S. P. G. கைம்பெண் சங்கம்.''





கோவை திருமண்டலத்தின் முன்னாள் குருவானவர் மற்றும் திருச்சபை வரலாற்று ஆசான் அருள்திரு. பிலிப். கே. மல்லி ஐயா அவர்களை கடந்த நாட்களில் (15.06.2024) சேலத்தில் சந்தித்த பொழுது இந்திய வேதாகம சங்கத்தால் சமீபத்தில் வெளியிடப்பட்ட படுகர் (BADAGA) மொழி வேதாகமம் ஒன்றினை நம்முடைய கிறிஸ்தவ வரலாற்றுச் சங்க நூலகத்திற்கு அன்பளிப்பாக ஐயா அவர்கள் வழங்கினார்கள். ஐயா அவர்களுக்கும் அவருடைய குடும்பத்திற்கும் எங்களுடைய நன்றியை நாங்கள் தெரிவித்துக் கொள்கின்றோம். உடன் நம்முடைய கிறிஸ்து வரலாற்றுச் சங்க உறுப்பினர்கள்.





இயேசு விடுவிக்கிறார் ஸ்தாபனத்தின் தலைவர் அண்ணன் மோகன் சி லாசரஸ் அவர்களை வரலாற்றுச் சங்கத்தின் சார்பாக மரியாதை நிமித்தம் சந்தித்த பொழுது. சங்கத்தின் சார்பாக இதுவரை வெளியிட்டுள்ள புத்தகங்களை அவர்களுக்கு கொடுத்தோம். சங்கத்தில் வெளியிட்ட ஐம்பதாவது புத்தகமான சேலத்திற்கு கிறிஸ்தவம் வந்தது என்ற நூலினை வழங்கிய பொழுது அருகில் சுரண்டை தொழிலதிபர் ASAR பாலசந்தர் அவர்களும் அருள்திரு. ஜெபரத்தினம் அருள்திரு. ஜெபசிங் மற்றும் திரு. ஆல்வின் கே.ஜெ. சார்லஸ் மற்றும் மனோகர்



கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தின் சார்பாக அன்பு அண்ணன் திரு.கார்த்திக் கமாலியேல் அவர்களிடம் வரலாற்றுச் சுவடுகள் மாத இதழை அறிமுகப்படுத்தி எங்களுடன் வரலாற்று சங்க உறுப்பினர்கள் மற்றும் அருள்திரு. ஜெபரத்தினம் ஐயா அவர்கள்

# சங்க பணிகளுக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்

## கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தின் அன்பின் வாழ்த்துக்கள்.

பூர்வ நாட்களை நினை; தலைமுறை தலைமுறையாய்ச் சென்ற வருஷங்களைச் கவனித்துப்பார்; உன் தகப்பனைக் கேள், அவன் உனக்கு அறிவிப்பான், உன் மூப்பர்களைக் கேள், அவர்கள் உனக்குச் சொல்லுவார்கள். உபாகமம் 32.7

ஒருங்கிணைந்த திருநெல்வேலி திருச்சபை உருவாகி சுமார் இரண்டரை நூற்றாண்டுகளாகின்றன. பராபரனின் பெரிதான கிருபையினால் இன்று திருமண்டலங்களாகவும், பல நூறு திருச்சபைகளாகவும் பெருகி வந்து கொண்டு இருக்கின்றது. பராபரனுக்கு ஸ்தோத்திரம். திருச்சபை சரித்திரத்தை அறிய வேண்டிய அவாவும் மக்கள் மனதில் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றது. இந்நிலையில் **'யார் நமது காரியமாய் போவான்,' இதோ அடியேன் இருக்கின்றேன், என்னை அனுப்பும்'** என்று ஏசாயா தீர்க்கன் முன் வந்தது போல திருநெல்வேலி வரலாற்றை மீள் பதிப்பு செய்யவும், வரலாற்று பணிகளை கள ஆய்வுப் மேற்கொள்ளவும், நின்றுபோன வரலாற்று **'தொடரோட்டத்தை தொடரவும்'** கடவுளால் தெரிந்துகொள்ளப்பட்ட இயக்கமே **' கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்'**

**கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்** தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்கள் பலரின் அரும்பெரும் முயற்சியினால் தொடங்கப்பட்டது. நம்முடைய வரலாற்றுச் சங்கத்தின் தரிசனத்தில், இறையியல் கல்லூரி மாணவர்கள் பலர் தன்னார்வத்தோடு தங்களையும் இணைத்து செயல்பட்டு வருகிறார்கள். மேலும் தமிழ்நாடு முழுவதும் உள்ள பல வரலாற்று ஆய்வாளர்களுடன் கைகோர்த்து இப்பணியைச் செய்து வருகின்றோம்.

வரலாற்றுச் சங்கமானது கடந்த ஐந்து ஆண்டுகளாக உங்களுடைய ஜெபத்தினாலும் பேராதரவினாலும், மிகச்சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. நமது பத்து அம்ச திட்டங்களில் மாத ஆய்விதழ், பழைய புத்தகங்கள் சேகரித்தல் மற்றும் டிஜிட்டல் செய்யும் பணி, புத்தக மறுப்பதிப்பு பணிகள், நூலகப் பணிகள், மிஷன் சுற்றுப்பயணம், புத்தக வனம் இணைய செயலி, ஆவணப்படம் தயாரித்தல், மிஷன் அருங்காட்சியகம், ஆய்வுக் கருத்தரங்கம் போன்ற பணிகளை கடந்த ஆண்டுகளில் செய்து வருகின்றதை நீங்கள் அறிந்ததே.

இந்த ஆண்டிலும் வரும் ஆண்டுகளிலும் நமது இலக்குகளை அதிகப்படுத்தி இருக்கின்றோம். குறிப்பாக **புத்தக மறுப்பதிப்பு, நூலக கட்டிட பணிகள், மிஷன் அருங்காட்சியகம்** மேற்கண்ட பணிகளை செய்ய வேண்டிய தேவையில் இருக்கின்றோம். இப்பணிகளில் நீங்கள் குடும்பமாகவோ, இயக்கமாகவோ அல்லது தனி நபராகவோ இணைந்து செயல்படவும் பங்கு பெறவும் அன்புடன் அழைக்கின்றோம்.

**நம் சங்கத்தின் பத்து அம்ச செயல்திட்டத்தை நினைவுபடுத்துகின்றோம்:-**

தமிழ் கிறிஸ்தவ வரலாற்றில் நீண்ட இடைவெளிக்கு பின்பு மீண்டும் ஒரு வரலாறு படைத்துக் கொண்டு இருக்கும் மாத ஆய்விதழ் தான் **'கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்'**. கடந்த 2020ம் ஆண்டு ஜூன் மாதம் முதல் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு தலைப்பைக் கொண்டு பல்வேறு அரிய ஆய்வுக் கட்டுரைகளோடு மிக சிறப்பாக வெளி வந்து கொண்டிருக்கிறது. **மறைக்கப்பட்ட, மறந்த, மறைந்த** மிஷனெரிகள் மற்றும் திருச்சபை வரலாறுகள், கள ஆய்வுகள், பல்வேறு அரிய வரலாற்று பொக்கிஷங்களுடன் தமிழகம் முழுவதும் தொடர்ந்து 1530 க்கு மேற்பட்ட வாசகர்களுடன் வந்து கொண்டு இருக்கின்றது.

- காலவோட்டத்தில் அறுபட்டுக்கிடந்த இசைத் தமிழ் கண்ணிகளைத் தற்கால இசைத் தமிழ் உலகுக்குக் கோர்த்துக் கொடுத்த மாபெரும் இசைத் தமிழ் அறிஞர் தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் அவருடைய அளப்பரிய செயல்களை நினைவுகூறும் வகையில் **ஆபிரகாம் பண்டிதர் நினைவு மின்னனு ஆராய்ச்சி நூலகம்** நம்முடைய சங்கத்தின் சார்பில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆபிரகாம் பண்டிதர் நினைவு ஆராய்ச்சி நூலகமானது தமிழ் கிறிஸ்தவ மின்னனு நூலகத்தில் **முதல் நூலகம்** என்ற சிறப்பைப் பெற்றது. இந்த நூலகமானது தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், தமிழ் கிறிஸ்தவ ஆராய்ச்சி மாணவர்களுக்கும் பயன்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ் கிறிஸ்தவ வரலாற்றில் ஒரு புதிய மைல் கல்லாகவும் அமையும். மேலும் அநேக புதிய தமிழ் கிறிஸ்தவ எழுத்தாளர்களை உருவாக்கவும், ஆராய்ச்சியாளர்களை உருவாக்கவும் இது உதவியாக இருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.
- வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த, மறுபதிப்பு செய்து வெளியிடப்படாத கிறிஸ்தவ மிஷனெரிகளின் வாழ்க்கை வரலாறு புத்தகங்களை மறுபதிப்பு செய்து வருகின்றோம். குறிப்பாக நெல்லை திருமண்டல வரலாற்று அறிஞர் பேராசிரியர் அருள்திரு **தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர்** அவர்களுடைய படைப்புகளை மறுபதிப்பு செய்து இன்றைய தலைமுறைகளுக்கு கொண்டு செல்லவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றோம். குறிப்பாக கடந்த ஆண்டு பேராசிரியர் அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் அவர்களின் வரலாற்று சிறப்புமிக்க புத்தகம் அனைத்தையும் மறுபதிப்பு செய்து வருகின்றோம்.

- நம்முடைய வரலாற்று சங்கமும் கிறிஸ்தவ ஆய்வு மற்றும் ஆவணப்படுத்து மையமும் இணைந்து **'புத்தக வனம்'** செயலி செயல்பட்டுக் கொண்டு இருக்கின்றது. இந்த செயலி தமிழகத்தில் முதல் முறையாக டிஜிட்டல் முறையில் கையடக்க வடிவில் புத்தகமாக முழு நூலகமாக உங்கள் கைகளில் கொடுத்துள்ளோம். இன்னும் பல ஆயிரம் புத்தகங்களை பதிவேற்றும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மேலும் பேராசிரியர் அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் பெயரிலேயே **நினைவு புத்தக அங்காடி** ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- தமிழக வரலாற்றில் கிறிஸ்தவ மிஷனெரிகளுடைய பங்கு குறிப்பிடத்தக்கது. அந்த மிஷனெரிகள் பணி செய்த இடங்கள், அவர்களுடைய நினைவிடங்கள், தங்கியிருந்த இல்லங்கள், கல்லறைகள், வரலாற்று சிறப்புமிக்க ஆலயங்கள், இரத்த சாட்சிகளாக மரித்த மிஷனெரிகள் பணி செய்த மற்றும் தங்களை இரத்த சாட்சியாக ஒப்புக்கொடுத்த இடங்களை தெளிவான முறையில் பார்வையிடவும், வெளியிடங்களிலிருந்து வரும் மக்களின் வசதிக்காகவும் **Mission Tourist Map** என்று செயலி உருவாக்கி அதன் மூலம் அவர்கள் தங்குமிடங்கள், வழித்தடங்கள் அடங்கிய மின்னியல் கையேடு அமைப்பது.
- வரலாற்றின் பக்கங்களில் மறைந்து கிடக்கும் கீர்த்தனை கவிஞர்கள், உபதேசிமார்கள், முன்னாள் குருமார்களுடைய வரலாற்று பொக்கிஷங்களை சேகரித்து வருகிறோம். மேலும் அவர்களுடைய வரலாற்றுத் தகவல்கள், அவர்களால் உருவாக்கப்பட்ட திருச்சபைகள், கிறிஸ்தவ பாடல்கள் உருவாக்கம் பெற்ற வரலாறுகள், பாடல்களின் வரலாறுகளையும் சேகரித்து அதை மின்னியல் முறைக்கு மாற்றும் பணிகளையும் செய்து கொண்டு இருக்கின்றோம்.
- தமிழ் கிறிஸ்தவ பழைய புத்தகங்களை சேகரித்து மின்னியல் முறையில் ஆபிரகாம் பண்டிதர் நினைவு ஆராய்ச்சி நூலகத்திலும், பேராசிரியர் **அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் நினைவு புத்தக அங்காடி**யிலும் பதிவேற்றம் செய்வதுடன் புத்தகங்களை தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், ஆராய்ச்சி மாணவர்களுக்கும் பயன்படும் விதமாக ஒரு சிறந்த ஆய்வு நூலகம் அமைக்கவும் முயற்சிகளும் மேற்கொண்டு வருகிறோம்.
- மிஷனெரிகளின் வாழ்க்கை வரலாற்று சம்பவங்களை அடிப்படையாக கொண்டு ஆவணப்படங்களை வெளியிடுவதற்கான முயற்சிகள் செய்து கொண்டு இருக்கிறோம். கர்த்தருக்கு சித்தமானால், வருகிற ஆண்டு **கிளாரிந்தா, ஏமி கார்மைக்கேல்** மிஷனெரிகளின் வரலாற்றை ஆவணப்படமாக்க திட்டமிட்டிருக்கிறோம்.
- தங்களுடைய வசதியான வாழ்வை தியாகம் செய்து நம் நாட்டிற்கு வந்து கோதுமை மணிகளாய் விதைக்கப்பட்ட மிஷனெரிகள் மற்றும் தன் சொந்த மக்களுக்காக தங்களையே அர்ப்பணித்த நம் இந்திய மிஷனெரிகளின் நினைவிடங்கள் மற்றும் கல்லறைகளை கண்டறிவதுடன் திருச்சபையுடன் இணைந்து பராமரித்து அவர்களுடைய தியாகங்களை குறித்த விழிப்புணர்வை திருச்சபை மக்களுக்கு ஏற்படுத்த பணியாற்றி வருகிறோம்.
- வரலாற்றுச் சங்கம் சார்பில் மிஷனெரிகள் பயன்படுத்திய கலை பொருட்கள் மற்றும் புத்தகங்கள், பைபிள், சேகரித்து வரலாற்று **அருங்காட்சியகம்** அமைக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறோம். மிஷனெரிகள் பயன்படுத்திய பொருட்களை சேகரித்து வருகிறோம்.
- கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் மற்றும் மேய்ப்பரின் பயிலகம் சார்பாக கடந்த இரண்டு மாதமாக இணையதள **சீர்திருத்த தமிழ் திருச்சபையின் ஆரம்பங்கள்** என்ற தலைப்பில் ஒவ்வொரு மாதமும் இரண்டாவது செவ்வாய்கிழமைகளில் இரவு ஏழு முப்பது மணிக்கு நடைபெற்று வருகின்றன.


கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, கடந்த 2017ம் ஆண்டு அற்பமாக ஆரம்பிக்கப்பட்ட நம்முடைய திருநெல்வேலி **கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்** இது வரையிலும் பல்வேறு தடைகளையும், நெருக்கடிகளையும் கடந்து வந்திருக்கிறது. வரலாற்று ஆய்வாளர்கள், ஆசிரியர்கள், வாசகர்கள், நண்பர்கள், நலன் விரும்பிகள் ஆகியோருடைய இடைவிடா ஜெபத்தாலும், ஆதரவாலும், உதவியாலும் நம் திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. மேலும் நம்முடைய மாதாந்திர ஆய்விதழும் தடைகளின்றி வெளி வருகிறது. நம்முடைய கிறிஸ்தவ வரலாற்றுச் சங்க செயல்பாடுகள் சிறப்பாக அமைய ஜெபத்தாலும், உடலுழைப்பாலும், பொருளாதார வழியிலும் உதவி வரும் அத்துணை நல்லுள்ளங்களுக்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம். தொடர்ந்து நாம் செயல்பட வேண்டிய தளங்கள் அநேகமுண்டு. இணைந்து செயல்பட அன்புடன் அழைக்கிறோம். வரலாற்றுச் சங்கத்தின் ஓர் அங்கமாக வரலாற்றை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லும் கருவியாவோம். சர்வ வல்லமை கொண்ட ஆண்டவரின் ஆயுதமாவோம்.

christianhistoricalsociety.in/
tchsportal.co.in

NEW RELEASE!

# சேலத்திற்கு கிறிஸ்தவம் வந்தது

**ஆசிரியர்** **ஜே பர்னபாஸ்**




தமிழகத்தின் சேலம் வட்டாரக் கிறிஸ்தவ வரலாற்றை உங்கள் கரங்களில் தவழும் நூல் வாயிலாக திரு. ஜே. பர்னபாஸ் அவர்கள் வெளிக்கொணர்ந்திருப்பது பெரும்பாராட்டுக்குரியது என்பது மிகையன்று. ஆங்கில ஆவணக்காப்பேடுகளில் இத்தகைய வரலாற்றுக் குறிப்புகள் அநேகம் இருப்பினும், அவைகள் பாமரக் கிறிஸ்தவர்களுக்கு சென்று அடைவதில் பெரிய இடைவெளி இருப்பதை யாரும் மறுத்தல் இயலாது. இந்த குறைவினை திரு. பர்னபாஸ் அவர்கள் பெருமளவுக்கு நீக்கியுள்ளார் என்பது மிகுந்த மகிழ்வைத் தருகிறது.

1971 - ஆம் ஆண்டு முதல், தென்னிந்திய திருச்சபையின் ஆயராக ஏற்காட்டில் நான் பொறுப்பேற்றது முதற்கொண்டு என்னுடைய கிறிஸ்தவ வரலாற்று பயணம் துவங்குகிறது. பின்னாண்டுகளில் திரு. பர்னபாஸ் அவர்களின் முன்னோர்களிடையே சேலம் அஸ்தம்பட்டி ஆலயத்தில் பணியாற்றிய நாட்கள் முதற்கொண்டு, திரு. பர்னபாஸ் அவர்களை அவர்தம் பள்ளிப் பருவம் தொட்டு அறிந்துள்ளேன். கிறிஸ்தவ வரலாற்றில் ஊக்கம் கொண்டு அதனை நிறைவான முறையில் பேணி வரும் அவருடைய அணுகுமுறைகளுக்கும், கிறிஸ்தவ வரலாற்று வரைவியலில் அவருடைய சீஷத்துவமான ஈடுபாட்டுக்கும் நாம் நன்றிக்கடன் பட்டுள்ளோம்.

Rev. பிலிப் கே மல்லி,
மேனாள் ஆயர்,
CSI கோயம்புத்தூர் திருமண்டலம்

Contact Us

**ஜே பர்னபாஸ்**
**+91 98659 76424**

**விலை. 100 மட்டும்.**

Return Requested:

Tamil Printed Book- For Private Cirulation Only

To

**CHRISTAVA VARALATRU SUVADUGAL**
# 2.2.3(4)North Street,
Bungalow Surandai-627859.
Tenkasi District
Tamil Nadu
Ph: 04633 290401
Mo: **91767 80001**

Owned & Published By CHRISTIAN HISTORICAL SOCIETY, Tamil Eduction- For Private Cirulation Only
Editor|G.MUTHAIAH SELVAKUMAR| at 2.2.3(4)North Street, Bungalow Surandai-627859. Tenkasi District Ph: 04633 290401